# سُوْرَةُبَنِيْ اِسْرَائِيْلَ

## ஸூரா பனீ இஸ்ராயீல்
## இஸ்ராயீல் சந்ததியினர்

17

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

- இந்த ஸூராவின் நோக்கம் : திருக்குர்ஆனுடைய முக்கியத்துவம்.![1]
- இந்த அத்தியாயத்தில், திருக்குர்ஆனின் மதிப்பும் மரியாதையும் திரும்பத் திரும்ப 11 தடவைகள், இதர ஸூராக்களில் இல்லாத அளவிற்குக் கூறப்பட்டுள்ளன..![2] உதாரணமாக
  - திருக்குர்ஆனின் இனிமை மற்றும் நோய் குணப்படுத்தும் தன்மை (78,79,82)
  - திருக்குர்ஆனின் மகத்துவம் (88,89)
  - திருக்குர்ஆனின் சாதனை (105, 106)
  - திருக்குர்ஆனை நேசிப்போர் (107 - 109)
- இவ்வத்தியாயத்தில் ‘அல்-இஸ்ரா-வல்-மிஃராஜ்’ (நபி (ஸல்) இரவில் பலஸ்தீன் மற்றும் விண்ணுலகம் அழைத்துச் செல்லப்படல்) குறித்துக் குறிப்பிடப்படுகிறது..!
- ‘அல்-இஸ்ரா’ அல்லது ‘மிஃராஜ்’ எனப்படுகின்ற, இந்த ஸூராவில், தவ்ராத்தில் இடம்பெற்றிருந்த, 15 பதினைந்து கட்டளைகள், வசனங்கள் 29 முதல் 39 வரை பேசப்பட்டுள்ளன..!

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. ‘அல்-இஸ்ரா -வல்- மிஃராஜ்’ நிகழ்வு மற்றும் இஸ்ரவேலர்களின் சரித்திரம்.(1-8)
2. மக்களை நேர்வழியில் அழைத்து வருவதற்கான திருக்குர்ஆனின் இயக்கம். (9-10)
3. மனிதனின் தன்மையும் இயல்பும். (11)
4. அல்லாஹ்வின் அடியார்கள் மற்றும் அத்தாட்சிகளிலே, அல்லாஹ்வின் வழிமுறையையும், கடந்தகால சமுதாயங்களில் இருந்து, படிப்பினையையும் பெறுதல்..! (12-17)
5. விரைவாகக் கிடைக்கின்ற இவ்வுலகத்தை விரும்புவோர், பெறுகின்ற கூலி! (18)

---

1. விபரங்களுக்கு: كتاب الله عزوجل ومكانته العظيمة ، المؤلف : عبد العزيز بن عبد الله آل الشيخ
2. விபரங்களுக்கு: : عظمة القرآن الكريم وتعظيمه وأثره في النفوس في ضوء الكتاب والسنة
سعيد بن علي بن وهف القحطاني

6. மறுமையை நேசிப்போர் மற்றும் அதற்கென செயல்படுவோருக்குக் கிடைக்கின்ற கூலி! (19)
7. அடியார்களிலே, அல்லாஹ்வின் வழிமுறை.! (20-22)
8. ஓரே அல்லாஹ்வை வணங்குதல், பெற்றோரைப் பேணுதல், உறவினரைப் பேணுதல், செலவு செய்வதிலும் நடுநிலையைப் பேணுதல் ஆகியவைகளைக் கடைபிடிக்கக் கட்டளை, அநியாயமாகக் குழந்தைகளைக் கொலை செய்தல், விபச்சாரம் புரிதல், தவறான முறையில் பொருளீட்டுதல், போன்றவைகளுக்கான தடை மற்றும் சந்தேகம், ஆணவம், இணைவைப்பிற்குக் கிடைக்கின்ற இழிவு – விபரங்கள்..! (23-41)
9. அல்லாஹ் ஒருவனே என்ற விபரமும், இணைவைப்பிற்கான மறுப்பும் ((42-44)
10. திருக்குர்ஆன் விஷயத்தில், இணைவைப்பாளர்களின் வரம்பு மீறலும், அவர்கள் நேர்வழியின் குறுக்கே தடையாக நிற்றலும். (45-48)
11. மீண்டும் எழுப்பப்படுவதை இணைவைப்பாளர்கள், மறுப்பதும், அதற்குரிய பதிலும். (49-52)
12. ஷைத்தானை நமக்கு எதிரியாகக் கருதுக! அல்லாஹ்வைப் பற்றி அறிந்திடுக! – அத்துடன் நபிமார்களின் படித்தரங்கள்..! (53-55)
13. இணைவைப்பாளர்களின் தவறான கொள்கைகளுக்கான மறுப்பு..! (56-60)
14. ஆதம் (அலை) அவர்களுக்கு வானவர்கள் சிரம்பணிவதும், இப்லீஸ் சிரம்பணிய மறுப்பதும் (61-65)
15. அல்லாஹ்வின் அருட்கொடைகளும், இணைவைப்பாளர்களின் மறுப்பும். (66-70)
16. மறுமைநாளின் சில பயங்கரங்கள். (71-72)
17. இணைவைப்பாளர்களின் திசைதிருப்புதலும், நபி (ஸல்) கண்ட சோதனையும்.(73-77)
18. நபி (ஸல்) அவர்களுக்குச் சில அறிவுரைகள். (78-85)
19. இணைவைப்பாளர்களுக்கு, ‘இதைப்போன்று இன்னொரு வேதத்தைக் கொண்டுவரத்’, திருக்குர்ஆன், விடுக்கின்ற சவால். (86-89)
20. இணைவைப்பாளர்களின் வரம்புமீறல். (90-93)
21. இணைவைப்பாளர்களின் சந்தேகங்களும், விளக்கமும். (94-100)
22. மூஸா (அலை) அவர்களுக்கும், பிர்அவ்னுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்.(101-104)
23. திருக்குர்ஆன் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கியதும், அறிவுடையோர் அதனை ஏற்றுக்கொள்ளுவதும். (105-109)
24. அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களால், பிரார்த்தனை

செய்யவும், அவனது தனித்தன்மை மற்றும் தூய்மையைப் பறைசாற்றவும் - கட்டளை..! (110-111)

## சில பாடங்கள்
## *Few Lessions*

1. இவ்வத்தியாயத்தில், நடைமுறைகள் மற்றும் உரிமைகள் குறித்து, வழிகாட்டுதல்கள் தரப்பட்டுள்ளன! உதாரணமாக: பெற்றோர், அநாதைகள், மற்றும் உறவினர்களுடன் நல்லுறவைப் பேணுதல், கருமித்தனம் மற்றும் விரையம் செய்வதைக் கைவிடுதல், சிசுக் கொலைக்கான தடை, விபச்சாரத்தை நெருங்காமை, ஆகியன போதிக்கப்படுகின்றன! அநியாயமாகக் கொலை செய்தல், அநாதைகளின் செல்வத்தை அபகரித்தல், மற்றும் ஒப்பந்த மீறல், ஆகியன தடுக்கப்படுகின்றன!! இது தவிர, அளவு மற்றும் எடையில் நியாயமாக இருந்திடவும், பணிவாக நடந்திடவும், கட்டளை இடப்படுகிறது; ஆணவப் போக்கு, தடை செய்யப்படுகிறது. [1]
2. இந்த ஸூரா, முந்தைய சமுதாயத்தினரைப் போன்று, இவ் வேதத்தை அலட்சியமாகப், புறக்கணிப்போரின் முடிவும், அவர்களுக்கு ஏற்பட்டதைப் போன்று, பயங்கரமானதாக அமையும் எனத் தெளிவுபடுத்துகிறது..! இருள்களில் இருந்து, நேர்வழி எனும் ஒளியின்பால் அழைத்து வருவதன்றோ இவ் வேதம்.!! [2]
3. இந்த ஸூராவில் முஹம்மத் (ஸல்) அவர்களின் ‘இஸ்ரா’ விற்கு ஆதாரமுள்ளது.
4. நபி (ஸல்) அவர்களின் ‘ரூஹ்’ மற்றும் உடல் இணைந்திருக்க, அவர்கள் விழிப்புடன் இருந்த நிலையில் ‘இஸ்ரா’ நிகழ்ந்தது; بِعَبْدِهِ என்ற பதத்தில் ‘உடல் மற்றும் ஆத்மா’ இரண்டும் இணைந்துள்ளன.
5. மக்காவின் ‘மஸ்ஜிதுல் ஹராமில்’ இருந்து, சிரியாவின் ‘பைதுல் மக்திஸ்’ வரை அழைத்துச் சென்று, மீண்டும் நபி (ஸல்) அவர்களை, மக்காவிற்கே அழைத்து வந்ததில், அல்லாஹ்வின் வல்லமைக்கான சான்று இருக்கிறது..!
6. வணக்க வழிபாட்டில், ‘இக்லாஸ்’ - மனத்தூய்மை மற்றும் ஒரே அல்லாஹ்வை வணங்குதல், அவசியமானதாகும்! (அல்லாஹ்விற்கான) கூட்டாளிகள் மற்றும் இணைவைப்பிலிருந்து, தடுக்கப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் உதவி செய்பவனும், அரசாட்சி புரிபவனும் அல்லாஹ் மட்டுமே!

---

1. விபரங்களுக்கு: حقوق دعت اليها الفطرة وقررتها الشريعة : محمد بن صالح العثيمين
2. விபரங்களுக்கு: كتاب الفوائد لابن القيم الجوزية رحمه الله

7. நபிமார்கள் மற்றும் இரஸூல்மார்களின் சரித்திரத்தைப் படிக்க, அழைப்பு விடுக்கப்படுகிறது.!
8. ‘பனூ இஸ்ராயீல்’ களைப் பற்றி ‘‘அவர்கள் உலகில் குழப்பம் விளைவிப்பர்; பாவங்களைப் புரிவர்’’ என அல்லாஹ் அறிவித்துவிட்டான்.
9. இறை-வேதனையைப் பற்றி, அல்லாஹ் இருமுறைக் குறிப்பிடுகிறான்.. இறை வேதனை, அடியார்களைப் பொறுத்தவரை, சில சமயம், அவர்கள் திருத்தப்பட்டு, பண்படுத்தப்படுகின்ற வகையில், அவர்களுக்கு அருளாக ஆகிப்போகிறது..!
10. யூதர்கள், முதலில் ‘புக்த் நஸ்ர்’ (நேபுகாத் நேசர்) மூலமாக வேதனை செய்யப்பட்டார்கள். பிறகு பாபிலின் மன்னர் அல்லது ரோமின் கைஸரால் வேதனை செய்யப்பட்டார்கள்.[1]
11. முதல் தோல்விக்குப் பிறகு, அவர்களுக்குப் பலத்தையும் வலுவையும் நல்கினான்; செல்வச் செழிப்பையும், குழந்தை பாக்கியங்களையும் தந்து, எதிரிகளின் முன்னிலையில், பெரும் எண்ணிக்கையில் திரள வைத்தான்..!
12. கட்டுப்பட்டு நடப்பதிலே (மனிதர்கள்) காட்டுகின்ற பொறுமைக்காக, பிறருக்காற்றும் நற்பணிக்காக, அல்லாஹு தஆலா இம்மையிலும் சிறிது நன்மையைத் தந்துவிடுகிறான்.. அவ்வாறே அவனுடைய சட்டங்களை, மீறி நடப்பதற்காக, (அவர்களுக்கு) சிறிய அளவில் தண்டனையையும் தருகிறான்!
13. அல்லாஹ்வின் கோபத்தை விட, அல்லாஹ்வின் இரக்கம் மிகுதியாக உள்ளது! ஏனெனில் ... اِنْ اَحْسَنْتُمْ اَحْسَنْتُمْ لِاَنْفُسِكُمْ என்ற வாக்கியத்தில், அல்லாஹ் நன்மையை, இரு முறைக் குறிப்பிடுகிறான். தீமையை ஒரு முறைதான் குறிப்பிடுகிறான்.
14. முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது, இறக்கப்பட்ட திருக்குர்ஆன், மனித குலம் முழுமைக்கும் ‘ஹிதாயத்’ - நேர்வழி ஆகும்.. சீரிய பாதை ஆகும். வாழ்க்கைத் திட்டத்தைத் தெளிவுபடுத்துகிறது.. நீதி – யின் மீது கட்டப்பட்டுள்ளது. நபிமார்கள் மீது விசுவாசம் கொள்ளவும், அழைப்புப் பணியின்போது இனிய அணுகுமுறையைக் கடைபிடிக்கவும், அது அழைப்பு விடுக்கிறது.
15. திருக்குர்ஆனின் நோக்கங்களில் ஒன்று: விசுவாசிகளுக்கு நற்செய்தி தருவதும், அவிசுவாசிகளுக்கு எச்சரிக்கை தருவதுமாகும். இத் திருக்குர்ஆன், (மாற்றாரை) அழைப்பதற்கும், (நம்மவரை) சீர்படுத்துவதற்கும் உள்ள (வாழ்க்கைத்) திட்டமாகும்.

---

1. اليهودية والنصرانية - د. سعود بن عبد العزيز الخلف

16. மனிதனிடத்தில், அவசரம் உள்ளது; எனவே அவன் தன்னையும், செல்வத்தையும், குழந்தைகளையும் அழிப்பதற்காகப் பிரார்த்தனை புரிகிறான்...(சபிக்கிறான்). ஆனால் அல்லாஹ்வோ, இரக்கமுள்ளவன்; அன்பு செலுத்துபவன்..!
17. இரவும் பகலும் மாறி மாறி வருவது, குறைவதும் கூடுவதுமாய் இருப்பது, ஒன்றை ஒன்று தொடர்வது யாவும், அல்லாஹ் இருப்பதை – அவன் ஒருவனே என்பதை – அவனது அறிவை – ஆற்றலைப் புலப்படுத்துகின்ற அடையாளங்களாகும்.
18. பகற்பொழுது, உழைத்துப் பொருளீட்டவும், இதர பணிகளுக்கும் பொருத்தமானதாகும்.! செல்வத்தைத் திரட்டவும், வாழ்வாதாரத்தைத் தேடவும் சீரிய சாதனமாகும்!!
19. மனிதனின் வினைச் சுவடி நல்லதோ கெட்டதோ, மறுமையில் வழங்கப்படும்.
20. பாவங்களும் தீமைகளும் அதிகரிக்கின்றபோதுதான், அவர்களை அழிப்பதற்காக வேதனை வருகிறது.. அல்லாஹ் ஒரு சமுதாயத்தை அழிக்க நினைக்கின்றபோது, அம்மக்களைச் செல்வந்தர்களாக்குகிறான். எப்போது அவர்கள், மாறுசெய்யத் தலைப்படுகிறார்களோ, அப்போது அவர்கள் மீது தண்டனை ஊர்ஜிதமாகிவிடுகிறது..! செல்வத்தைப் பெற்றபிறகு, யார் மாறுசெய்யாமல் தம்மைக் காத்துக்கொள்கிறாரோ அவருக்கோ செல்வம் நி∴மத் - அருட்கொடை ஆகும்.
21. உலகில் மக்கள் இருவகைப் படுவர்! உலகத்திலேயே மோகம் கொண்டோர் - ஒரு வகையினர்!. மற்றொரு வகையினர், மறுமை வாழ்விற்கு, முக்கியத்துவம் தருவோர்!! உலகை நேசிப்பவர்களில், அல்லாஹ், தான் நாடிய சிலருக்கு உலகத்தில் சிறிதைத் தந்துவிடுகிறான்.. மறுமையை நேசிக்கும் மக்களுக்கோ, அல்லாஹ், ‘முழுமையான நற்கூலி தரப்படும்’ என வாக்களிக்கிறான்.
22. அல்லாஹ் தன் ஞானத்தின்படி, மு∴மின்கள், காபிர்கள் என இருசாராருக்கும், உணவு வழங்குகிறான்! உணவில் கூடுதல் குறைவு என்பது, ஈமான் மற்றும் குப்ரு என்கிற அடிப்படையில் அல்ல.. அதேசமயம், மறுமையிலோ அமல்களின் அடிப்படையில்தான், தீர்ப்பு வழங்கப்படும்.
23. அமல்கள் மூன்று நிபந்தனைகளின்படி ஏற்கப்படுகின்றன!

➢ சரியான விசுவாசம் ➢ தூய எண்ணம் ➢ ஷரீஅத்-தின் வட்டத்திற்குள் நிற்றல்.

24. அல்லாஹ் அடியார்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் முயற்சி மற்றும் செயல்களின் அடிப்படையில், உணவைத் தந்திருக்கிறான்; மு∴மின்கள், காபிர்கள் என்கிற அடிப்படையில் உணவுப் பங்கீட்டைச் செய்யவில்லை!

25. ஒரே அல்லாஹ்வை மட்டும் வணங்கிடக் கட்டளையிடப்பட்டிருக்கிறது; ஏனெனில் இதுவே அஸ்திவாரம் ஆகும்.
26. பெற்றோரின் நலம் நாடுதலில், அவர்கள் மறைந்த பிறகு, அவர்களுக்காகப் பிரார்த்திப்பதும் உள்ளது!
27. பெற்றோரின் முதுமையில், அவர்களைக் கவனிப்பது கடமையாகும்; அவர்களின் பேச்சுக்களுக்காக, ‘உப்..’(ப்ச்சீ..) என்று சொல்வதும்கூட ஹராம் - தடைசெய்யப்பட்டதாகும்.
28. அல்லாஹ் அடியார்களின் உள்ளங்களைப் பார்க்கிறான்; நல்லோர் யார்? தீயோர் யார்? என்று அவனுக்குத் தெரியும்.. அவன்பால் அதிகம் திரும்புவோரை, அவன் அதிகம் மன்னிக்கிறான்!.
29. தேவையற்ற வீண்செலவு பழிக்கப்பட்டிருக்கிறது; இதனைச் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்கள் எனப்படுகிறார்கள். ஹலால் (அனுமதிக்கப்பட்ட) செலவுகளில் எல்லை மீறுவது, ‘இஸ்ராப்’ اسـراف(விரையம்) ஆகும். ஹராம் (தடுக்கப்பட்ட) செலவுகளில், ஒரே ஒரு திர்ஹம் செலவிட்டாலும், அது ‘தப்தீர்’ تبذير (வீண் விரையம்) ஆகிவிடும்.
30. விரையம் செய்வது, தடுக்கப்பட்டதைப் போல், இஸ்லாத்தில் கஞ்சத்தனமும் கருமியாக இருப்பதும், தடுக்கப்பட்டிருக்கிறது.. இஸ்லாம் (செலவிடுதலில்) நடுநிலையைப் போதிக்கிறது!
31. அல்லாஹ் நாடியோருக்கு, உணவை வாரி வழங்குகிறான்; நாடியோருக்குக் குறைத்துவிடுகிறான்.!
32. வறுமையைப் பயந்து, குழந்தைகளைக் கொலை செய்வது ஹராம் ஆகும். ஜாஹிலிய்யா எனும் அறியாமைக் காலத்தில், இந்த நடைமுறைப் பரவலாக இருந்தது; அல்லாஹ் அதனைத் தடுத்தான், ஏனென்றால் அல்லாஹ்தானே உணவளிக்கின்றான்; சக்தியைத் தருகிறான்.
33. விபச்சாரமும், அதற்கு வழிவகுப்பவைகளும் தடை செய்யப்பட்டுள்ளன; அதன் அருகில் செல்வதுகூட தடுக்கப்பட்டிருக்கிறது.
34. அநியாயமாக ஒருவரைக் கொலை செய்வது, இஸ்லாத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது..!
35. அநாதையின் செல்வத்தை அபகரிப்பது, தடை செய்யபட்டிருக்கிறது; அவர்கள் பருவமடையும் வரை, அவர்களின் செல்வம் பாதுகாக்கப்பட்டு, ஒப்பந்தத்தின்படி அவர்களிடம் ஒப்படைக்கப்படும்..!
36. சரிக்குச் சரியாக நிறுப்பதற்கும், முழுமையாக அளப்பதற்கும், உத்தரவு இருக்கிறது.
37. அறியாத விஷயங்களில், மூக்கை நுழைக்காமல் இருப்பதும், தேவையற்றவைகளை தவிர்ந்து கொள்வதும், மனிதன் மீது

அவசியமாகும்.!

38. ஒவ்வொரு மனிதனும், அவனுடைய செவிப்புலன், பார்வை, மற்றும் இதயம் குறித்து விசாரிக்கப்படுவான்.

39. பெருமையடிப்பதில் இருந்தும், அலட்டிக் கொள்வதில் இருந்தும், (மனிதன்) தடுக்கப்படுகிறான்; மென்மை மற்றும் பணிவுடன் நடக்கக் கட்டளையிடப் படுகிறான்!

40. வானவர்களை, அல்லாஹ்வின் பெண்பிள்ளைகள் எனக் கூறுவது, அபாண்டமும் பெரும்பாவமும் ஆகும்.

41. அல்லாஹ்வின் ஒவ்வொரு படைப்பும், அல்லாஹ்வைத் துதித்துத் தூய்மையைப் பறைசாற்றுகின்றன..!

42. திருக்குர்ஆனை ஓதிக்கொண்டிருந்த, நபி (ஸல்) அவர்களைக் கடந்து சென்றபோது, குரைஷிக் காபிர்களின் கண்கள், அவர்களைப் பார்க்கமுடியாத வகையில், அல்லாஹ் மறைத்து வைத்திருந்தான்.

43. இணைவைப்பாளர்களின் (எண்ணத்திற்கேற்ப) பார்வையிலும், விளங்கிடும் ஆற்றலிலும் அல்லாஹ் திரையைப் போடுகிறான்; உள்ளத்திலும் தடையைப் போடுகிறான்! எனவே அவர்கள், திருக்குர்ஆனை விளங்கிட இயலவில்லை.

44. இணைவைப்பாளர்கள், அல்லாஹ்வுடன் இன்னும் சிலவற்றையும், வணக்கத்திற்குரியவை என வாதிட்டார்கள்; மீண்டும் எழுப்பப்படுவதையும் மறுத்து வந்தார்கள்..!

45. தமது அறிவுக் குறைபாடு மற்றும் இயலாமையின் அடிப்படையில், யூகம் செய்ததால்தான், இணைவைப்பாளர்கள் மறுமையை மறுத்தார்கள்.. அதேசமயம் விண்ணிலும், மண்ணிலும் எந்தப் பொருளும் அல்லாஹ்வை மிகைக்க முடியாது..!

46. கப்ரில் இருந்து எழுப்பப்பட்டு, சப்தம் ஒலிக்கப்படும்போது, செவியேற்று பதிலளிப்பதைத் தவிர (மண்ணறைவாசிகளுக்கு) வேறு வழிஇல்லை.

47. மாற்றுமதத்தவர்களிடமும், இனிய அணுகுமுறை மற்றும் மென்மையான உரையாடல், மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்: وقولوا للناس حسنا ‘‘மக்களிடம் நல்லவற்றையே சொல்லுங்கள்’’..!

48. நபிமார்களின் சிறப்புகளில் வித்தியாசங்கள் இருக்கின்றன! அல்லாஹ் சிலரைவிட சிலரை மேம்படுத்தியுள்ளான்.. ஆனால் அவர்களது சிறப்புக்களின் அடிப்படையில், நாமாகப் பாகுபாடு காட்டக்கூடாது!

49. ‘ஜபூர்’ வேதத்தில், ஹராம் ஹலால் பற்றிய சட்டங்களோ, கடமைகள் மற்றும் விதிமுறைகளோ கிடையாது; மாறாக பிரார்த்தனைகளும், துதிச் சொற்களும்தான் இடம் பெற்றுள்ளன. இவைகளில்..., அனைத்தையும் தெளிவுபடுத்தக் கூடிய

திருக்குர்ஆன், வழங்கப்படும், என்கிற யூதர்களுக்கான, குறிப்பு இடம்பெற்றுள்ளது..!

50. துன்பம், துயரம், கஷ்டம், நோய் மற்றும் சோதனை யாவற்றையும் அல்லாஹு ஸுப்ஹானஹு வ தஆலா மட்டுமே, நீக்குவான்..!

51. அல்லாஹ் அல்லாதவர்களிடம், உதவியைத் தேடுவது, தப்பான காரியமாகும். உதவி தேடப்படுகிறவர், வானவராக, ஈஸா (அலை) அவர்களாக, அல்லது நபி உஜைர் (அலை) அவர்களாக இருப்பினும் சரியே! இவர்கள் அனைவருமே, அல்லாஹ்விடம்தான் உதவியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.. சுவனத்திற்காக மன்றாடிக் கொண்டிருந்தார்கள்.!

52. ஸமூத் கூட்டத்தினர் (கேட்டுப் பெற்ற) பெண் ஒட்டகம் வழங்கப்பட்டதில், நபி ஸாலிஹ் (அலை) அவர்களின் உண்மைக்கான சான்று உள்ளது; அல்லாஹ்வின் வல்லமைக்கான ஆதாரமுள்ளது.. இத்தனைக்குப் பிறகும் ... அவர்கள் ஏற்க மறுத்ததால் அச்சமுதாயத்தினர் அழித்தொழிக்கப்பட்டார்கள்.!

53. ‘இஸ்ரா’ பற்றிய வசனமும், ஸூரா அத்-துகானின் (43-46) ஜக்கூம்(கள்ளிச் செடி) வசனமும், மனிதர்களுக்கான ஒரு பரிசோதனை ஆகும். இதனை மறுப்போர், தண்டனைக்குத் தகுதி பெறுவார்களாக! விசுவாசமுள்ளோர் அப்படியே ஏற்றிடுக!

54. முஷ்ரிக் (மக்கத்து இணைவைப்பாளர்) களுடைய வரம்புமீறலும், பிடிவாதமும், அல்லாஹ்விற்குக் கீழ்ப்படியாமல், ஆதம் (அலை) அவர்களுக்கு சிரம்பணிய மறுத்த, இப்லீஸ் உடைய செயலை, ஒத்திருக்கிறது.

55. உண்மையான அல்லாஹ்வின் அடியார்கள், ஷைத்தானின் சூழ்ச்சிகளை விட்டும், பாதுகாப்புப் பெறுவர்; அல்லாஹ் அவனது அடியார்களுக்குப் போதுமானவன்!.

56. ஆடல்-பாடல், கூத்து-கும்மாளம் யாவும், தடை செய்யப்பட்டவை என்கிற செய்தி இருக்கிறது..! ஏனென்றால், இந்த ஷைத்தானின் குரல், பாவத்திற்கு அழைப்பு விடுக்கிறது.. எனவே இவைகளை விட்டு, விலகியிருப்பது கட்டாயமானதாகும்.

57. மனிதகுலம் பெற்ற அல்லாஹ்வின் அருட்கொடைகளும், அன்பளிப்புகளும் ஏராளம்.. அவைகளில் ஒன்றுதான், கடல்களில் மிதந்து செல்லும் கப்பல்கள்..!

58. ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினர், சிறப்பிக்கப்பட்டுள்ளார்கள்; அவர்கள் அனைத்துப் படைப்புகளையும் கையகப்படுத்துகிறார்கள்; இதற்காக அவை, அவர்களுக்கு வசப்படுத்தப்பட்டுள்ளன! அவர்கள் நிலத்திலும், நீரிலும், சுற்றித் திரிந்திடவும் ஆற்றல்,

பெற்றுள்ளார்கள்!!

59. மறுமைநாளின் கேள்வி-கணக்கு, உறுதியான சான்றுகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில், நடைபெறும். அல்லாஹ் எவருக்கும் அநீதியிழைக்க மாட்டான்.

60. யாருடைய பதிவேடு, வலக்கரத்தில் தரப்படுமோ.., அவர்களே வெற்றியாளர்கள் ஆவர்!.

61. ஆதாரங்களையும், அத்தாட்சிகளையும் கண்டபின்பும் கபோதியாகக் காட்சி தருகிறவர், மறுமையிலும் கண்ணிழந்தவராக எழுவார்..!

62. அல்லாஹு தஆலா, முஷ்ரிக்குகளின் யுத்தங்களில், முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வெற்றியளித்தான்; அவர்களைப் பாதுகாத்தான்..!

63. 'மகாமம்-மஹ்மூத்' என்பதன் விளக்கம்: 'அஷ்-ஷபாஅதுல் உஜ்மா' (பெரிய ஷபாஅத்) ஆகும். மறுமை நாளில் விசாரணை துவக்கப்படுவதற்காக, நபி (ஸல்) சிபாரிசு செய்வர்!

64. திருக்குர்ஆன் மு.ஃமின்களுக்கு, ஷிபா.ஃ. (நோய் நிவாரணி) யாகவும் ரஹ்மத் (அருள்) ஆகவும் திகழ்கிறது.. காபிர்களும் அநியாயக்காரர்களும் கவலையைத் தவிர, வேறெதையும் இதன் மூலம் பெறப்போவதில்லை..! காரணம் அவர்கள் இதனைப் பொய்ப்பித்தார்கள்.

65. மிகச்சிறப்பான வழிகாட்டுதலை, இஸ்லாம் தந்துகொண்டு இருக்கின்றபோது, யூதர்களும், இணைவைப்பாளர்களும், ரூஹ் (ஆத்மா) மற்றும் அதன் தன்மை குறித்துக் கேள்வி எழுப்பியது, அவர்களுடைய அட்டகாசத்திற்கு ஒரு சான்று..! அல்லாஹ்வின் உத்தரவில், 'ஆத்மா' வைப் பற்றி மனிதன், சிறிய அளவே, அறிந்துள்ளான்' எனக் கிடைக்கிறது, ஒரு தெளிவு..!!

66. ரஸூல் (ஸல்) அவர்களுக்கு, வழங்கப்பட்ட சிறப்புக்களையும் பாக்கியங்களையும், திருக்குர்ஆனின் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.. இவ் வேதம் நேர்வழியும் அற்புதமும் ஆகும்.

67. மனிதரும் ஜின்னும் இணைந்து, முயன்றாலும், இதைப் போன்ற வேதமொன்றைக், கொண்டுவர இயலாது.. என திருக்குர்ஆனே தெளிவுபடுத்திவிட்டது..!

68. 'இணைவைப்பாளர்கள்' தாம் எதிர்பார்த்த அனைத்தையும், அல்லாஹ்வின் தூதர், செய்துகாட்ட வேண்டும்' என எண்ணியது, அவர்களின் அறியாமை மற்றும் தவறான சிந்தனையின் விளைவே ஆகும். அதற்கு 'அல்லாஹ்வின் நாட்டமின்றி, எதையும் செய்ய என்னால் இயலாது' என்பதே நபி (ஸல்) அவர்கள், தந்த பதில்.! ( هل كنت الا بشرا رسولا )

69. திருமறை வசனங்கள், இறக்கப்படுவது, அல்லாஹ்வின் வசமிருந்தே! அவைகளை ஒரு நபி இட்டுக்கட்ட இயலாது..!

70. இணைவைப்பாளர்களின் கோரிக்கைகள், ஏற்கப்படாமல் போனது, அல்லாஹ்வீன் அருளே ஆகும்! அவர்களது கோரிக்கைகள், 'மு.்.ஜிஸா' (அற்புதங்)களாக நிறைவேற்றப்பட்டு, அதன் பின்பும், அவ்விணைவைப்பாளர்கள், விசுவாசம் கொள்ளாமல் இருந்திருந்தால், அவர்களை, அல்லாஹ் அழித்திருப்பான்.!!

71. முஷ்ரிக்-களுடைய முட்டாள் தனம்தான் இது: 'அற்புதமான திருக்குர்ஆனுக்குப் பதில் தரமுடியாத நிலையில், உணரப்படுகின்ற வகையில், மற்றொரு அற்புதம் வேண்டும்' என்கிறார்கள்..!'

72. 'ஓர் இறைத்தூதர், மனிதராக இருக்கமுடியாது' என்பதே காபிர்களின் பலமான எண்ணமாக இருந்தது.

73. நல்லறம்புரிய வழிகாட்டுவது, அல்லாஹ்வின் வசமே, உள்ளது!

74. காபிர்களும், முஷ்ரிக்குகளும், மறுமை நாளில், பார்வையற்றவர்களாக – செவிடர்களாக – ஊமைகளாக எழுப்பப்படுவார்கள்!

75. மூஸா (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட (9) ஒன்பது அத்தாட்சிகளையும், நபி முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் அல்லாஹ் எடுத்துரைப்பது, நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மைக்கு, ஓர் ஆதாரமாகும்.

76. மூஸா (அலை) அவர்களின் சமூகத்தினர், இந்த அத்தாட்சிகளை மறுத்த காரணத்தால், அவர்களை, அல்லாஹ் கடலில் மூழ்கடித்தான்; அவர்களால் தோற்கடிக்க முடியவில்லை.

77. அல்லாஹ்வின் திருநாமங்கள் அனைத்தின் பொருட்டாலும், துஆ – கேட்டிடுக!

78. இரவுத் தொழுகையில், திருக்குர்ஆனை நடுநிலையான குரலில் ஓதுக! உரத்துச் சப்தமிடுவதும், சன்னமான குரலும் கூடாது!

79. அல்லாஹு தஆலா, புகழப்படுவதற்குத் தகுதியானவன்; கூட்டாளிகளின் தேவையற்றவன்; மனைவி மக்களுக்கான அவசியமும் அற்றவன்; வல்லமை மிக்கவன்; அடியார்களிடம் எந்தத் தேவையும் அவனுக்கில்லை.. அவனிடமே அனைத்துப் படைப்புகளும் தேவையாகின்றன!

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள்

- இறை அருட்கொடைகளை மறுப்பதன் விளைவு மற்றும் எச்சரிக்கை குறித்து, ஸூரா அந்நஹ்ல், பொதுவாகப் பேசுகிறது; அதே எச்சரிக்கை, பனீ இஸ்ராயீல் அத்தியாயத்தில், தெளிவாகவும், விரிவாகவும் இடம்பெறுகிறது... யூதர்கள் மற்றும் பனீஇஸ்ராயீல்களின் உதாரணங்கள் தரப்பட்டு, வரலாற்று ரீதியாக, நிரூபிக்கப்பட்டுள்ளது..! அதாவது.., இந்த இரு அத்தியாயங்களுக்கும் இடையே இருப்பது, சுருக்கம் மற்றும் விரிவு என்கிற வித்தியாசமே!
- இந்த அத்தியாயம் ‘‘திருக்குர்ஆனின் முக்கியத்துவம்’’ என்கிற தலைப்பைக் கொண்டுள்ளது; அடுத்த அத்தியாயம் அல் கஹ்பும், இந்தத் தலைப்பில்தான் ஆரம்பமாகிறது.

(الحمد لله الذي أنزل على عبده الكتاب)

- ஸூரா அந்நஹ்ல், படைப்புகளில் காணப்படுகின்ற வெளிப்படையான அருட்கொடைகளைக் குறிப்பிடுகிறது... பனீ இஸ்ராயீல் அத்தியாயமோ, தனிமனிதர்கள் மற்றும் சமூகத்தினருக்கு அருளப்படுகின்ற, பொதுவான அருட்கொடைகளையும் சிறப்பான அருட்கொடைகளையும் குறிப்பிடுகிறது.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

### திருக்குர்ஆன்

إِنْ أَحْسَنتُمْ أَحْسَنتُمْ لِأَنفُسِكُمْ ۖ وَإِنْ أَسَأْتُمْ فَلَهَا ۚ ١٧:٧

17:7. நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கே நன்மை செய்து கொள்கிறீர்கள். நீங்கள் தீமை செய்தால் அதுவும் உங்களுக்கே(தீமை)யாகும்,

17:23 وَقَضَىٰ رَبُّكَ أَلَّا تَعْبُدُوا إِلَّا إِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا ۚ إِمَّا يَبْلُغَنَّ عِندَكَ الْكِبَرَ أَحَدُهُمَا أَوْ كِلَاهُمَا فَلَا تَقُل لَّهُمَا أُفٍّ وَلَا تَنْهَرْهُمَا وَقُل لَّهُمَا قَوْلًا كَرِيمًا

17:23. அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது


என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான் அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால், அவர்களை உ..்ப் (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம் - அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம் - இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக!

وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ وَقُل رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا 17:24

17:24. இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக் மேலும், “என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!” என்று கூறிப் பிரார்த்திப்பீராக!

## அல்ஹதீஸ்

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒரு மனிதர் வந்து இப்படிக் கேட்டார்: ‘‘உறவைப் பேணுவதில், நான் யாருக்கு அதிகம் கடமைப்பட்டுள்ளேன்?”. நபி (ஸல்) அவர்கள், ‘‘உனது தாய்” என்றார்கள்.. அதற்கு அவர், ‘‘பிறகு யார்?” என்றார். நபி (ஸல்) அவர்கள், ‘‘பிறகு உனது தாய்” என்றார்கள்.. அதற்கு அவர், ‘‘பிறகு யார்?” என்றார். நபி (ஸல்) அவர்கள், ‘‘பிறகு உனது தாய்” என்றார்கள்.. அதற்கு அவர், ‘‘பிறகு யார்?” என்றார். (நான்காம் முறை) நபி (ஸல்) அவர்கள், ‘‘பிறகு உனது தந்தை” என்றார்கள்..! (ஸஹீஹுல் புகாரீ: 5971)



# سُوْرَةُ الْكَهْفِ

## ஸூரா அல்-கஹ்ப்
## குகை

**18**

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள
### *Few Objectives*

❖ இந்த ஸூராவின் நோக்கம் ‘‘குழப்பங்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதே’’ ஆகும்!. 1

❖ இந்த அத்தியாயத்தில் நான்கு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

1) குகைத் தோழர்கள்
2) இரட்டை தோட்டக்காரன்
3) மூஸா (அலை) மற்றும் கிள்று
4) துல்கர்னைன் ஆகியவை.

இந்த நான்கு நிகழ்ச்சிகளிலும் உள்ள, பொதுவான அம்சம் ‘வாழ்க்கையின் சோதனைகள்’ ஆகம்.

1) மார்க்கம் மற்றும் விசுவாசத்திற்கான சோதனை (குகைத் தோழர்கள் நிகழ்வு)
2) செல்வத்திற்கான சோதனை (இரட்டை தோட்டக்காரன் சம்பவம்)
3) கல்விக்கான சோதனை (மூஸா (அலை) மற்றும் கிள்று சந்திப்பு)
4) அதிகாரத்திற்கான சோதனை (துல்கர்னைன் நடவடிக்கை)

❖ சோதனைகளில் வெற்றிபெறுவது எப்படி? என்கிற விளக்கத்துடன் இந்த ஸூரா முடிவடைகிறது..!

قُلْ إِنَّمَا أَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوحَىٰ إِلَيَّ أَنَّمَا إِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ ۖ فَمَن كَانَ يَرْجُو لِقَاءَ 18:110
رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا

18:110. (நபியே!) நீர் சொல்வீராக: ‘‘நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது் எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன் உங்களுடைய (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து, தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக

❖ இந்த அத்தியாயத்தில் மறைவான விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன:

1) குகைத் தோழர்கள் 2)இரட்டை தோட்டக்காரன்
3) மூஸா (அலை) மற்றும் கிள்று
4) துல்கர்னைன் நடவடிக்கை போன்றவை..

1. விபரங்களுக்கு: سمات المؤمنين في الفتن وتقلب الأحوال ، تأليف : صالح بن عبد العزيز آل الشيخ

நாம் பார்க்காத அல்லது நமக்குப் புரியாத, எத்தனையோ விஷயங்களை, விசுவாசம் கொண்டாக வேண்டும்; இன்னும் அல்லாஹ் ஞானம் மிக்கவன் என்பதையும் உறுதிகொண்டே ஆகவேண்டும்.

❖ இவ்வத்தியாயம் இறக்கப்பட்டதற்கான காரணங்களும், ஆரம்பத்திலேயே குறிப்பிடப்படுகின்றன.
  ➢ காபிர்கள் மற்றும் இணைவைப்பாளர்களுக்கு எச்சரிக்கை
  ➢ மு.ஃ.மின்களுக்கு ஆறுதலும் நற்செய்தியும்
  ➢ நபி (ஸல்) அவர்கள் மற்றும் நபித்தோழர்களுக்கு ஆறுதல்.

❖ ஸூரா அல்-கஹ்பின் மூலமாக, மக்காவில் எஞ்சியிருந்த முஸ்லிம்களுக்கு, மனஆறுதலும், காபிர்களுக்கு எச்சரிக்கையும் (last warning) விடுக்கப்படுகிறது..!

❖ 'நபிமார்களின் சரித்திரத்தை நன்றாக அறிந்தவர்கள் நாங்களே!' என்ற ஒரு எண்ணத்தில், யூதர்கள், உறுதியாக இருந்தனர்; ஸூரா யூஸுப், பனீஇஸ்ராயீல் மற்றும் அல்கஹ்ப் மூலம் இவர்களுக்கு, வாய்ப்பூட்டு போடப்பட்டது! இறைவசன வார்த்தைகளில் இடம்பெற்ற, இதர வரலாற்று ஆதாரங்களின் (historical evidence) மூலம், நபித்துவம் நிலைநாட்டப்பட்டது..!!

## சில தலைப்புகள்
### *Few Topics*

1. திருக்குர்ஆனின் முக்கியத்துவம். (1-5)
2. முஷ்ரிகுகள் (இணைவைப்பாளர்கள்) ஈமான் கொள்ளவேண்டுமென்பதில், நபி (ஸல்) அவர்களின் பேராசை; இவ்வுலகம் ஒரு தேர்வுக்களம், என்கிற விபரம்! (6-8)
3. குகைவாசிகள் - நிகழ்ச்சி (9-27)
4. நல்லோர் சகவாசத்தை நாடுக! தீயோர் சகவாசத்தைத் தவிர்த்திடுக!! (28)
5. அநியாயக் காரர்களுக்கு ஏற்படும் முடிவு (29-31)
6. உலக வாழ்க்கையில் ஏமாந்து, உலாவுவோர் மற்றும் உலகத்தின் உண்மை நிலையை உணர்ந்து, பற்றற்ற முறையில், வாழ்வோருக்கான உதாரணங்கள் (32-44)
7. உலகத்தின் உண்மை நிலை மற்றும் நல்லறங்களின் சிறப்பு – விபரங்கள்! (45-46)
8. மறுமைநாளின் சில பயங்கரங்கள். (47-49)
9. ஆதம் (அலை) அவர்களை நோக்கிச் சிரம்பணிய, வானவர்களுக்கு அல்லாஹ் இட்ட கட்டளையும், அதற்கு இப்லீஸின் மறுப்பும் அவனது பகைமையும்..! (50)

10. இணைவைப்பாளர்களின் பொய்ப்பிரச்சாரங்கள், அதற்கான மறுப்பு, மற்றும் அவர்கள் சந்திக்கவிருக்கும் முடிவுகள்! (51-53)
11. இறைத்தூதர் மற்றும் திருக்குர்ஆனின் முக்கியத்துவம், இதில் முஷ்ரிகுகள் கண்ட நிலைபாடு, மற்றும் அவர்களுக்கு, அல்லாஹ் அளித்த அவகாசம்..! (54-59)
12. மூஸா (அலை) மற்றும் கிள்று ஆகியோரின் நிகழ்வுகள். (60-82)
13. துல்கர்னைன் மற்றும் யஃஜூஜ் - மஃஜூஜ் நிகழ்ச்சி!. (83-99)
14. மறுமைநாளில், காபிர்கள் காணும் முடிவு. (100-106)
15. மறுமைநாளில் முஃமின்கள் பெறப்போகின்ற கூலி (107-108)
16. அல்லாஹ்வின் பரிபூரணமான அறிவு, அவனது தனித்தன்மை, மற்றும் நபி (ஸல்) அவர்களின் மனிதத் தன்மை– விபரம்!(109-110)

## சில பாடங்கள்
## *Few Lessions*

1. மனத்தூய்மையுடன் அல்லாஹ்விற்காகவே நாம் அமல் செய்யவேண்டும்; அப்போது அமல்கள் ஏற்கப்படும்.
2. மறுமையில் அல்லாஹ்வைச் சந்திப்பதில் உறுதிகொள்வது, சோதனைகளில் வெற்றியைப் பெற்றுத்தரும்.
3. எப்போதும் நாம் இப்படி எண்ணுவோமாக : கிள்று எனும் அறிஞரைப்போல், உலகில் உள்ள மறைவான செய்திகள் பல; உண்மைகள் பல; நாம் அறிந்ததோ சில..!
4. அல்லாஹ் தந்திடும் நேர்வழியால் பயன்பெறுக! அவனது திருவேதத்தைப், பற்றிப் பிடித்திடுக!! அத்திருவேதத்தின்பால் அழைப்பு விடுத்திடுக!!! இவை அவசியமானவை ஆகும்.
5. முரண்பாடு இல்லாத – குழப்பமற்ற வேதம்தான் திருக்குர்ஆன்! ஒரே நேரத்தில், ஈருலக வெற்றிக்கும் வழிகாட்டும் வாழ்க்கைத் திட்டமே அல்குர்ஆன்!!
6. மறுப்போர் மற்றும் மாறுசெய்வோரை எச்சரிப்பதும், விசுவாசமிக்க அடியார்களுக்கு நற்செய்தி தருவதும் கூட, இறைவேதம் அருளப்பட்டதற்கான நோக்கத்தில் உள்ளதே!
7. உலக வாழ்க்கையின் உண்மைத் தன்மை, அதன் முடிவுநிலை குறித்து, ஆராய்ந்தால், நமது கவலையும் வேதனையும் காணாமல் போகும்.
8. நம் செயல்பாடுகள், ஷரீஅத் சட்டத்திற்கேற்ப இருக்கிறதா இல்லையா? என யோசித்து, அவைகளை, சீர்படுத்திட அழைப்பு விடுக்கப்படுகிறது.
9. சீர்திருத்தவாதிகளும், இறையழைப்பாளர்களும் ஒழுங்குடன் பிரார்த்திக்க, இதோ ஒரு செயல்முறை முன்மாதிரி - குகைத்

தோழர்களின் பிரார்த்தனையிலே!

10. கால நேரம் கவனித்துப் பேசுவதற்கான அழைப்பு விடுக்கப்படுகிறது.

11. திருக்குர்ஆன் மற்றும் அல் ஹதீஸில் அருள்மிக்க துஆ-க்கள் பல உண்டு; அவைகள் குறிப்பிட்ட பயன்கள் தரவல்லவை..!

12. குகைத் தோழர்கள் இரண்டு விஷயங்களை வேண்டினார்கள் :
    1) அல்லாஹ்வின் பேரருளை, அவன் அவர்கள் மீது பொழிவதற்காக.!
    2) சத்தியப்பாதையின்பால் அவர்கள் வழிகாட்டப்படுவதற்காக.!

13. சீர்திருத்தவாதிகளும், இறையழைப்பாளர்களும், சோதனைகள், குழப்பங்கள் மற்றும் கருத்துவேறுபாடுகளுக்கு உள்ளாகும்போது, அவர்கள் பின்வரும் 'துஆ' வை வேண்டுவார்களாக!

رَبَّنَا آتِنَا مِن لَّدُنكَ رَحْمَةً وَهَيِّئْ لَنَا مِنْ أَمْرِنَا رَشَدًا 18:10

"எங்கள் இறைவா! நீ உன்னிடமிருந்து எங்களுக்கு ரஹ்மத்தை அருள்வாயாக! இன்னும் நீ எங்களுக்கு எங்கள் காரியத்தை (ப் பலனுள்ள தாக)ச் சீர்திருத்தித் தருவாயாக!" என்று கூறினார்கள்.

14. அஸ்ஹாபுல் கஹ்ப் (குகைத் தோழர்கள்) சரித்திரத்தில், மார்க்கத்திற்காகவும், குழப்பங்களில் இருந்து தப்பிப்பதற்காகவும், ஹிஜ்ரத் (இருப்பிடம் துறந்து) செல்வதற்கான, சான்று இருக்கிறது..!

15. குகைத் தோழர்கள் நிகழ்வில், அநியாயக்காரர்களின் அராஜகத்தில் இருந்து, வெளியே வருவதற்குரிய வழிமுறைகளைத் தேடுவதற்கான ஆதாரம், இருக்கிறது! இது நபிமார்கள், இரஸூல்மார்கள் மற்றும் அல்லாஹ்வுடைய நேசர்களின் வழிமுறையாகவும் உள்ளது!! தன்அடியார்களுடன் அல்லாஹ் மேற்கொள்ளும் நடவடிக்கையின் சூட்சுமமாகவும் திகழ்கிறது!!!

16. இளமைப் பருவம் வாழ்க்கையின் முக்கியமான பருவம்; போராடுகின்ற – உணர்ச்சிகரமான - வலிமையான பருவம்; இப்பருவத்தில் மார்க்கத்தைத் தேடுவோருக்கு, மிகப் பெரிய நற்செய்தி இருக்கிறது.

17. இளமையை மதித்திடுக! ஏனெனில் இளைஞர்கள் சமுதாயத்தின் தூண்கள்; கலாச்சாரத்தின் அடையாளங்கள்; இவர்கள் மீது தனிக்கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது..!

18. ஒரு இளைஞன், திருக்குர்ஆனின் நிழலில் வளர்ந்து, ஈமானுடன் வாழ்ந்து வந்தால், அவனுக்குக் கிடைக்கின்ற வெகுமதி, மறுமைநாளில் ரஹ்மானுடைய அர்ஷின் நிழலில், கிடைத்திடும் இடமாகும்.!

19. ஒரு இறை அழைப்பாளன், பயனளிக்கின்ற கல்வி, தெளிவான விளக்கம், நுட்பமான கவனம், கூர்த்த மதி, சமகாலத்தின் சூழலை அறிந்திருத்தல், தொலைநோக்குத் திட்டங்கள், மற்றும் சரியான திட்டமிடல் ஆகியவைகளைக் கொண்டிருக்க வேண்டும்..!

20. ஒரு இறை அழைப்பாளன், அன்பு, கனிவு, பரஸ்பர உதவி, கற்பித்தல் மற்றும் கற்றுக் கொள்தல் மூலமாகச் செயலாற்ற வேண்டும்..!

21. திருக்குர்ஆனை ஓதுதல, மற்றும் அதனைப் பற்றிப்பிடித்தலுக்கான அழைப்பு விடுக்கப்படுகிறது.. ஏனெனில் இது, 'அல்லாஹ்வின் பலமான கயிறு' ஆகும்.

22. அல்லாஹ்வின் படைப்புகளில், அல்லாஹ்வின் வழிமுறை நிலைத்திருக்கும்: அவனது சட்டங்கள் அமல்படுத்தப்படும், - என்பதில் உறுதி கொள்க! பொருந்திக் கொள்க!! திருப்தியைப் பெறுக!!!

23. இதயம், எப்போது உலக மோகத்தில் வீழ்கிறதோ, அப்போது, அதிகாரம் மற்றும் செல்வச் செருக்குடையோரை முன்னோக்கத் துவங்குகிறது!

24. மனோ இச்சையைப் பின்பற்றுவோர் மற்றும் அலட்சியமாக இருப்போரிடமிருந்து விலகி இருப்பதில்தான், நன்மை இருக்கிறது.!

25. இஸ்லாத்தில், கொள்கை மற்றும் சிந்தனை விஷயத்தில், சுதந்திரம் தரப்பட்டுள்ளது.. ஏனென்றால் சத்தியம் தெளிவானது; எளிதானது! யாரையும் நிர்ப்பந்திக்க எந்த வாய்ப்பும் இல்லை! அத்துடன், அனைவரும் கடுமையான கேள்வி-கணக்கைச் சந்திக்க வேண்டும்; தவறான வழிசெல்வோர், நோவினை மிக்க வேதனையைப் பெறவேண்டும், என்பதும் தெளிவாக்கப்பட்டுவிட்டது.

26. ஒரு இறையடியான் எப்போதும், அல்லாஹ்வின் நாட்டத்தை முன்னிறுத்துக! தான் நாடுகின்ற ஒவ்வொரு செயலிலும், ان شاء الله (அல்லாஹ் நாடினால்) எனக் கூறுக..!

27. உலகத்தின் சுகபோகத்தில் மூழ்கிக் கிடப்போருக்கு, அறிவுரை பகர்வதும், அவர்கள்மீது ஆதாரத்தை நிலைநாட்டுவதும், அவசியம் ஆகும்.

28. மறுமை மற்றும் மரண சிந்தனையை, காபிர்கள் தங்களின் உலக-ஆசாபாசத்தில் விழுந்த அடியாகக் கருதி, அதனைக் கேலி செய்து கொண்டிருந்தார்கள்!

29. செல்வமும் பிள்ளைகளும் உலகத்தின் அலங்காரமாகும்; அல்லாஹ்விடம் இருக்கின்ற (நன்மையான)வைகளே, அனைத்தையும் விட சிறப்பானவை; நிலையானவை! ஒரு மு.ஃ.மின் நிலையான நல்லறங்களைத் தேடவேண்டும்.

30. உலகின் சுகபோகத்தில் இருந்து தப்பித்திட, சோதனைகளில் இருந்து விரைவாக மீண்டுவர, மறுமையை நினைவில் கொள்க! (நல்லறங்களைப் பெருக்கி) அதற்குத் தயாராகுக!!
31. இப்லீஸைப் பற்றிய செய்தி, (நாம்) எச்சரிக்கப் படுவதற்காகவும், ஆணவத்தால் அவனுக்கு நிகழ்ந்த ‘கதியை’ அறிந்திடவும், அவனது சுயநலம் மற்றும் சூழ்ச்சியைப் புரிந்து கொள்ளவும், (நமக்கு) நினைவூட்டப்பட்டுள்ளது.!
32. உலகத்தின் சுகபோகங்களால், அகங்காரத்தை ஏற்படுத்துவதே, அவனது அபாயகரமான தாக்குதல் ஆகும்..! இத்தனைக்கும் அல்லாஹ் கூறுகிறான்:‘ உலக வாழ்க்கை உங்களை மயக்கிவிட வேண்டாம்’. (31:33) இவ்வசனத்தில் அல்லாஹ் மேலும் கூறுகிறான்: ‘அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானதே ஆகும்’.
33. இப்லீஸின் செயல்பாடுகள், அவனால் வழிநடத்தப்படுகின்ற மக்களிடமும் இருக்கிறது; அவர்களிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
34. படைப்புகளின் உண்மைநிலை மற்றும் மனிதனின் மூலம் குறித்து, தவறான கொள்கைகளும், தோல்விகண்ட சிந்தனைகளும் பல உள்ளன.. அவையனைத்திற்கும், யூகம், சந்தேகம், மற்றும் மனோ இச்சையின் பின் செல்லுதல் ஆகியவைதான், அடிப்படைகளாக உள்ளன.!
35. திருக்குர்ஆன், நேர்வழி, அருள், வெளிச்சம் மற்றும் வெற்றிக்கான சாதனம் ஆகும். பல்வேறு விதங்களிலே – சிறப்பான முறையிலே, ஆதாரத்தை நிலைநாட்டக் கூடியதுமாகும்.
36. குழப்பக் கடல்களில், மூழ்கிக் கிடப்பவர்தான், ஆதாரங்களும் சான்றுகளும் தெளிவானதற்குப் பின்பும், பாவங்களிலும், வழிகேட்டிலும் பிடிவாதமாக இருப்பார்..!
37. அல்லாஹ் தன் அருளின் காரணத்தால், பாவிகளுக்கும், மாறுசெய்வோருக்கும் அவகாசம் தருகிறான்.. மட்டுமல்ல, நிரந்தர வேதனை வருவதற்கு முன்னால், தூயமுறையில் பாவமன்னிப்பு கேட்கவும் அழைப்பு விடுக்கிறான்.!
38. நபிமார்களின் அழைப்பு தெளிவாகிறது; அவர்களின் தூதுச் செய்தி, மகத்தானது.. அதில் நற்செய்தியின் வடிவமும் உண்டு; எச்சரிக்கையின் வடிவமும் உண்டு.. அவர்களைப் பின்பற்றினால், குழப்பங்களில் இருந்து, ஈடேற்றம் பெறமுடியும்..!
39. சத்தியத்தை மறுப்பவர்கள், எப்போதுமே குருட்டுத் தனமாகத்தான் சண்டையிட்டிருக்கிறார்கள்.. உண்மைகளை மறைப்பதற்கும் அசத்தியத்தை அலங்கரிக்கவும்தான் பாடுபடுகிறார்கள்.. விளைவைச் சாதாரணமாகக் கருதுகிறார்கள்.

40. கண்ணை மூடிக்கொண்டு சண்டையிடுவதால், சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள இயலாது! அசத்தியத்தில் இருப்போர், அசத்தியத்தால் வரம்புமீற ஆயத்தமாகிறார்கள்; பொய்-பித்தலாட்டம் மற்றும் போலியான வாதங்களில் வீழ்ந்து கிடக்கிறார்கள்..!

41. மூஸா (அலை) அவர்களின் நிகழ்ச்சியிலிருந்து, பின் வரும் அவர்களின் தன்மைகள் தெரியவருகின்றன: கல்வியைத் தேடுவதற்காக, முயற்சியுடன் அவர்கள் மேற்கொண்ட பயணங்கள், உயரிய நோக்கம், எண்ணத்தில் இருந்த உறுதி மற்றும் நம்பிக்கை, கஷ்டத்தில் கடைபிடித்த மனோதிடமும், பொறுமையும்.!

42. பயணத்தின்போது ஒருவரை உடன் வைத்துக்கொள்வது பயணத்தின் ஒழுங்காகும். ஒருவர் அமீர்; அடுத்தவர், அவர் சொல்கேட்டு நடப்பவர்.. பயணத்தின் நோக்கத்தைப் புரிந்து செல்க! பயணத்தின்போது நற்குணத்தை வெளிப்படுத்துக!!

43. கல்வியைக் கற்பவர், அந்தஸ்தில் வித்தியாசம் இருந்தாலும், ஒரு ஆலிமின் (அறிஞரின்) சொல்கேட்டு நடப்பார்.. சில வேளைகளில் தன்னைவிட தகுதியில் குறைந்தவரிடமிருந்துகூட, கல்வியைக் கற்க நேரிடலாம்.!

44. மூஸா (அலை) அவர்களும், கிள்று அவர்களும், தத்தமது கல்லியில் தனிச்சிறப்பைப் பெற்றிருந்தனர்!. ஒருவர் மற்றொருவரின் கல்வியைப் பெற்றிருக்கவில்லை.. இவ்வாறே, ஒவ்வொருவரும் தேவையான, குறிப்பிட்டதொரு கல்வியைக் கற்றிட, எண்ணுகின்றனர்; அவர்கள் அக்கல்வியைப் பெற்றிட, குறிப்பிட்ட மக்களையே (அறிந்தவர்களையே) நாடவேண்டும்.

45. ஒருவர் தன் கல்வியால், தலைக்கணமுடையவராக, ஆகிவிடக் கூடாது; மேலும் அவர் எதை மறுக்கிறாரோ, அதில் அவசரம் காட்டவேண்டாம்..! அதில் இருக்கும் ஞானத்தை இவர் புரிந்திடாமல் இருக்கலாம்.

46. கல்வியைத் தேடுவதும் வணக்கமே! அத்துடன் அல்லாஹ்வை நெருங்குவதற்கான சாதனம் ஆகும் அது!! உண்மையில், கல்வியின் அசல் நோக்கம், மார்க்க (விஷய)த்திலிருந்து பயன்பெறுவதாக இருக்கவேண்டும்.

47. அல்லாஹ்வின் பாதையில், கஷ்டத்தைச் சகித்து, நபி (ஸல்) அவர்கள் தந்த கல்வியைப் பெறுகின்ற அடியானுக்காக, அல்லாஹ், கல்வியின் வாசல்களைத் திறந்து தருகிறான்; தன்புறத்தில் இருந்தும் விளக்கத்தை நல்குகிறான்.

48. மூஸா (அலை) அவர்கள் மற்றும் கிள்று அவர்களின் சம்பவத்தில், ஒரு நிர்வாகி, ஆசிரியர், உபதேசிப்பவர் மற்றும் ஒரு சீர்திருத்தவாதி, ஆகியோருக்கான தகுதிகள் புலப்படுகின்றன!

அதாவது இரக்கம், கல்வி, மனத்தூய்மை, பரோபகாரம் செய்தல் ஆகிய தன்மைகளோடு, வணக்க வழிபாட்டில் சிரத்தை காட்டுவார்களாக! நல்லொழுக்கங்களைப் பேணுவார்களாக!!

49. கல்வியை விட இரக்கம் முற்படுத்தப்பட்டிருப்பதில், ஒரு ஆசிரியர் மற்றும் மாணவருக்கு அதன் தேவையை உணர்த்துவது நோக்கமாகும். இரக்கத்தை இழப்பவன் கல்வியை இழிவுபடுத்துகிறவன்; மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறவன். இவன் நீரிலும் நிலத்திலும், சீர்கேட்டை ஏற்படுத்துகிறான். மேலும் அக்கல்வி வியாபாரமே! பயன்தரும் கல்வி அல்ல..!!

50. மாணவர்களின் இதயங்களில், இரக்கம் இல்லாமல் போகும்போது, தம் ஆசிரியர்களுடன், அவர்கள் மோசமாக நடந்துகொள்கிறார்கள்; சில வேளைகளில், ஒருபடி மேலே சென்றுவிடுகிறார்கள்..!

51. கல்வி இருவகைகளில் கிடைக்கிறது: 1) ஒருவர் சுய முயற்சி மற்றும் உழைப்பினால் பெறுகின்ற கல்வி 2) அல்லாஹ், தான் நாடுகின்ற அடியார்களுக்குத், தருகின்ற கல்வி.

52. ஒரு மாணவர், பொறுமை, மென்மை, மற்றும் நன்னடத்தையைக் கடைபிடித்திடுக! தன் ஆசிரியரிடம் கேள்வியைக் கேட்கின்றபோது, மென்மையாக வினவுக!

53. கல்விகற்க வரும் மாணவரை, ஆசிரியர், பரிசோதித்திடுக!

54. மற்றவர்களின் இயலாமைக்கான காரணத்தைத் தேடவேண்டிய விஷயம், மக்களின் விளங்கும் தன்மையில் நிலவிடும் வித்தியாசங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டிய விஷயம், விவரிக்கப்பட்டுள்ளது.

55. இறையழைப்பாளர்களும், சீர்திருத்தவாதிகளும், தங்களுடைய அழைப்புக்களுடன், சமுதாயத்தில் பரவியிருப்பது, (பணிக்கு) உகந்ததாகும். அவர்கள் சமூகத்தின் நிலையை அளவிடட்டும்! மக்களின் நிலைகளையும், மனவோட்டங்களையும் படித்தறியட்டும்!! பிறகு செயல்திட்டங்களையும் வகுத்திடட்டும்!!!.

56. ஒரு ஏழை, ஒரு பொருளின் உடமையாளராக இருப்பினும், அவர் தன்னிறைவு அடையாமல் (தேவையுடையவராக) இருக்கின்றவரை அவர், ஏழை (மிஸ்கீன்) என்றே, கருதப்படுவார்..!

57. குழந்தைகள் மரணமடைகின்றபோது, பொறுமை காப்பதும், அல்லாஹ் நிர்ணயித்துள்ள ‘விதி’ யை ஏற்றுக்கொள்வதும், அவசியமாகும். கிள்று அவர்கள் கொலைசெய்த சிறுவன், ‘உயிருடன் விட்டுவைக்கப்பட்டிருந்தால், தன் பெற்றோருக்கு, மாறுசெய்திருப்பான்’ என்கிறபோது, அச்சிறுவனின் மரணம், பெற்றோருக்கு, நன்மையாகவே ஆகியிருக்கிறது.

58. அல்லாஹ்வின் முடிவு, ஒரு மு.ஃ.மினுடைய விருப்பத்திற்கு மாற்றமாக இருந்தாலும், அது அவனுக்கு, நன்மையையே தேடித்தரும்.

59. ஒருவர், மறதியாகத் தவறிழைத்து விட்டால், பாவம் எதுவும் ஏற்படாது.

60. உலகத்தில், குறிப்பாக செல்வம் மற்றும் உயிரைப் பொறுத்தவரை, வெளிப்படையானதை வைத்தே, முடிவெடுக்கப்படும். நிகழ்வுகளின் உண்மைக் காரணம், வேறாக இருப்பினும், மூஸா (அலை) அவர்கள், வெளிப்படையானதை வைத்தே, கேள்விகளைக் கேட்டார்கள்.!

61. நன்மையை நாடி, குழப்பத்தைத் தடுத்திடுவதற்காக, ஒருவரின் அனுமதியின்றி, அவரது செல்வத்தில் கைவைக்கலாம்.. அப்பொருளில் நஷ்டமோ, குறையோ ஏற்பட்டாலும் சரியே! உதாரணமாக அநியாயக்கார அரசனிடமிருந்து, கப்பலைப் பத்திரப்படுத்த, கிள்று அவர்கள், அதனைச் சேதப்படுத்தியதைப் போல்..!

فَأَرَدتُّ أَنْ أَعِيبَهَا எனவே நான் அதை (ஓட்டையிட்டு)ப் பழுதாக்க விரும்பினேன். فَخَشِينَا أَن يُرْهِقَهُمَا طُغْيَانًا وَكُفْرًا அவன் (வாலிபனாகி) அவ்விருவரையும் வழிகேட்டிலும், கு.ஃ.ப்ரிலும் சேர்த்து விடுவான் என்று நாம் பயந்தோம். فَأَرَادَ رَبُّكَ أَن يَبْلُغَا أَشُدَّهُمَا وَيَسْتَخْرِجَا كَنزَهُمَا எனவே, அவ்விருவரும் தக்க பிராயமடைந்த தம்மிருவரின் புதையலையும் வெளிப்படுத்தி (எடுத்துக்) கொள்ள வேண்டும் என உம்முடைய இறைவன் நாடினான் ....

62. இந்த நிகழ்வில், மேற்கண்ட வசனங்களில், ஒழுங்கு மற்றும் மரியாதைக்கான அரிய உதாரணம் காணக்கிடைக்கிறது.. முந்திய இருவசனங்களில், கிள்ரு அவர்கள், கப்பலைச் சேதப்படுத்தியது மற்றும் சிறுவனைக் கொலை செய்வதைத் தன்னுடைய செயலாகக் கூறுகிறார்கள். மூன்றாம் வசனத்தில், இரு சிறுவர்கள் பருவ வயதை எட்டி, புதையலை அடைந்து கொள்வதைக் குறிப்பிடும்போது, அதனை அல்லாஹ்வுடன் சேர்த்து, 'அல்லாஹ்வின் நாட்டப்படி' எனச் சொல்கிறார்கள். பெரிய வயதை அடைவதும், உறுதியானவராக மாறுவதும், அல்லாஹ்வின் எண்ணப்படியன்றோ நடைபெறும்..!

63. அல்லாஹ் நல்ல செல்வத்தை, நல்லவர்களுக்காகப் பாதுகாத்துத் தருகிறான்.. அதுமட்டுமின்றி அச்செல்வம், இவர்களுக்கும், இவர்களின் சந்ததியினருக்கும், நல்லதாகவே அமைகிறது.!

64. ஒரு முஸ்லிம் தீமையைப் பார்த்தால், அதை, உடனே எச்சரித்திடுக! ஆனால் ஒழுங்கு மற்றும் மென்மையுடனே!!

65. வெற்றி மற்றும் முன்னேற்றத்திற்கான - சில காரணங்களையும்..,

அதற்கு உதவுகின்ற - சில காரியங்களையும்.., கடைபிடிப்போம்! உதாரணமாக: தூய ஈமான், பயன்தரும் கல்வி, நல்லமல்கள், அல்லாஹ்வைச் சார்ந்திருத்தல், மற்றும் உன்னதமான மனஉறுதி ஆகியன..!

66. துல்கர்னைன் அவர்களின் நிகழ்ச்சியில், ஒரு வெற்றிகரமான தளபதிக்காக.. நேர்மையான ஆட்சியாளருக்காக.. உதவிசெய்கின்ற வெற்றியாளருக்காக செயல்முறை முன்மாதிரியொன்று, வழங்கப்பட்டிருக்கிறது.!

67. நீதியான ஆட்சியாளர், அல்லாஹ்வின் எதிரிகளுக்கு, யுத்தப்பிரகடனம் ஆவார்! அல்லாஹ்வின் நேசர்களுக்கோ அமைதியின் சின்னம் ஆவார்!! அவர் படைத்தவனுக்குக் கட்டுப்படுவோரை, பக்கத்தில் வைத்துக்கொள்வார்! படைத்தவனுக்குக் கட்டுப்படாதோரை, தள்ளிவைப்பார்! நன்மையை ஏவி தீமையைத் தடுப்பார்! என்றைக்குமே அல்லாஹ்வின் அருட்கொடைகளை மறவாதிருப்பார்..!

68. (துல்கர்னைன்) ய.்.ஜூஜ் ம.்.ஜூஜ் கூட்டத்தினரைச் சுவர் எழுப்பித் தடுத்துவைத்தது, குழப்பவாதிகளின் தீமைகளைத் தடுக்க – அவர்களைக் கைதுசெய்ய – சிறைச்சாலை அமைத்திட ஆதாரமாகிறது.!

69. துல்கர்னைன் அவர்கள், அரியதோர் காரியத்தை நிறைவேற்றியவேளையில், அல்லாஹ்வின் அருளை நினைவுகூர்கிறார்கள். இந்நிகழ்வில், அருளாளன் அல்லாஹ்வின் மகத்துவத்திற்குத் தலைசாய்ப்பதும், அவனுக்கு நன்றியுடன் இருப்பதும் புலனாகின்றது..!

70. சமுதாயம், சீர்திருத்தவாதிகளையும், நல்லொழுக்கமுள்ள வழிகாட்டியையும் எதிர்பார்க்கிறது.. ஏனெனில் அவர்கள், அநீதி எனும் இருட்டுக்களைத் துடைத்தெறிவார்கள்! குழப்பத்தை வேறுடன் பிடுங்குவார்கள்!! நீதியை நிலைநாட்டுவார்கள்!!! சத்திய வெளிச்சத்தைப் பரப்புவார்கள்!!!!

71. ஈமான் கொண்டோருக்கு, அல்லாஹ்வின் பின்வரும் நற்செய்தி இருக்கிறது.. ‘குழப்பங்களில் இருந்தும், வழிகேடுகளில் இருந்தும், அல்லாஹ் அவர்களைப் பாதுகாக்கிறான்! சுவனங்களில் மிக உயர்வான இடத்தில், என்றென்றும் வீற்றிருப்பர்!

72. நமது நபி (ஸல்) அவர்களும், இதர நபிமார்களைப்போல், மனிதரே; அல்லாஹ்விடமிருந்து, தூதுச் செய்தியைக் கொண்டுவந்திருக்கிறார்கள்; மாசடையாத கொள்கை, உலக சீர்திருத்தம், மற்றும் மறுமையின் அருட்கொடைகளைப் பற்றிய நற்செய்திகளை, எடுத்து வந்திருக்கிறார்கள்..!

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள்

- குறைஷியர், திருக்குர்ஆனை அழிப்பதற்காகப் பல்வேறு தாக்குதல்களை வகை வகையாகத் துவக்கினார்கள் ; எனவே (பனீஇஸ்ராயீல் மற்றும் அல்கஹ்ப்) அத்தியாயங்கள் இரண்டிலும், திருக்குர்ஆனின் மகத்துவம், மிகத் தெளிவாகவே, சவால்விடுக்கின்ற வகையில், பேசப்படுகின்றது!
- பனீஇஸ்ராயீல் அத்தியாயத்தில், யூதர்களின் உண்மை முகம் வெளிக் கொணரப்பட்டுள்ளது. அல்கஹ்ப், மற்றும் அதனையடுத்து வருகின்ற மர்யம், அத்தியாயங்களில் கிறித்தவர்களின் உண்மை முகம் வெளிப்படுத்தப்படுகிறது.!

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

### திருக்குர்ஆன்

18:28 وَاصْبِرْ نَفْسَكَ مَعَ الَّذِينَ يَدْعُونَ رَبَّهُم بِالْغَدَاةِ وَالْعَشِيِّ يُرِيدُونَ وَجْهَهُ ۖ وَلَا تَعْدُ عَيْنَاكَ عَنْهُمْ تُرِيدُ زِينَةَ الْحَيَاةِ الدُّنْيَا ۖ وَلَا تُطِعْ مَنْ أَغْفَلْنَا قَلْبَهُ عَن ذِكْرِنَا وَاتَّبَعَ هَوَاهُ وَكَانَ أَمْرُهُ فُرُطًا

18:28. (நபியே!) எவர் தம் இறைவனுடைய திருப்பொருத்தத்தை நாடியவர்களாக காலையிலும், மாலையிலும் அவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடன் நீரும் பொறுமையை மேற் கொண்டிருப்பீராக! இன்னும் உலக வாழ்க்கையின் அலங்காரத்தை நாடி அ(த்தகைய)வர்களை விட்டும் உம் இரு கண்களையும் திருப்பி விடாதீர் இன்னும், எவனுடைய இதயத்தை நம்மை நினைவு கூர்வதிலிருந்து நாம் திருப்பி விட்டோமோ அவனை நீர் வழிபடாதீர் ஏனெனில் அவன்தன் இச்சையைப் பின் பற்றியதனால் அவனுடைய காரியம் வரம்பு மீறியமாகி விட்டது.

الْمَالُ وَالْبَنُونَ زِينَةُ الْحَيَاةِ الدُّنْيَا ۖ وَالْبَاقِيَاتُ الصَّالِحَاتُ خَيْرٌ عِندَ رَبِّكَ ثَوَابًا وَخَيْرٌ أَمَلًا 18:46

18:46. செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களேயாகும் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய நற்கருமங்களே உம்முடைய இறைவனிடத்தில் நன்மைப் பலனுடையவையாகவும், (அவனிடத்தில்) நம்பிக்கையுடன் ஆதரவு வைக்கத்தக்கவையாகவும் இருக்கின்றன.

## அல்ஹதீஸ்

عن أبي هريرة رضي الله عنه قال قال رسول الله صلى الله عليه وسلم: الدنيا سجن المؤمن و جنة الكافر (صحيح مسلم - ٢٩٥٦)

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘இவ்வுலகம் முஃமின்களுக்குச் சிறைச்சாலை; காபிர்களுக்கு சுவனம் ஆகம்’’.

(ஸஹீஹ் முஸ்லிம்: 2956)



# سُوْرَةُمَرْيَمَ

ஸூரா மர்யம்
(அலை) - ஈஸா (அலை)
அவர்களின் தாயார்

19

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

❖ குழந்தைகள் அல்லாஹ்வின் அருட்கொடைகள். எப்படி எல்லாப் பொருள்களையும் அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டு (நல்வழியில்), பயன்படுத்துகிறோமோ, அவ்வாறே குழந்தைகளையும் அல்லாஹ்விற்குப் பொருத்தமான (நல்ல) வைகளில் ஈடுபடுத்த வேண்டும்.!

❖ (நமது) செல்வத்திற்குக், குழந்தைகள், எப்படி வாரிசுதாரர்களாக ஆகிறார்களோ.. அவ்வாறே அவர்கள், (நமது) மார்க்கத்தைப் பாதுகாத்துப் (பரப்புவதிலும்) நம் வாரிசுகளாக ஆகவேண்டும்..!

❖ தன் வாரிசாக இருந்து, இறைவேதத்தையும், தூதுத்துவத்தையும் தனக்குப் பின் பேணிப் பாதுகாத்திட, ஜகரிய்யா (அலை) அவர்கள், தனக்குக் குழந்தைகள் வேண்டிப் பிரார்த்தித்தார்கள்.

❖ இம்ரானுடைய குடும்பத்தின் நிலையும் இதுதான்: இம்ரானின் மனைவி, தன் குழந்தையை அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணிக்க, நேர்ச்சை செய்திருந்தார்கள்..! அவர்களுக்குப் பின் மர்யம் (அலை) அவர்களின் நிலையும் இப்படித்தான் இருந்தது..!! இந்த நிலைதானே இப்றாஹீம் (அலை) அவர்களின் காலத்திற்குப் பின்.. (தொடர்ந்து) இஸ்மாயீல் (அலை), இஸ்ஹாக் (அலை) மற்றும் யஃகூப் (அலை) ஆகியோரிடமும் அவர்களின் சந்ததியினரிடமும் இருந்தது.!!!

❖ விமர்சனம்: இந்த (ஸாலிஹானவர்களின்) சந்ததியினரில், தமது வாரிசுப் பொறுப்பை முறையாக நிறைவேற்றியவர்கள், மற்றும் நிறைவேற்றாதவர்கள் என இரு சாரார்களையும் பற்றி, பின்வரும் வசனங்கள் பேசுகின்றன:-

أُولَٰئِكَ الَّذِينَ أَنْعَمَ اللَّهُ عَلَيْهِم مِّنَ النَّبِيِّينَ مِن ذُرِّيَّةِ آدَمَ وَمِمَّنْ حَمَلْنَا مَعَ نُوحٍ
وَمِن ذُرِّيَّةِ إِبْرَاهِيمَ وَإِسْرَائِيلَ وَمِمَّنْ هَدَيْنَا وَاجْتَبَيْنَا ۚ إِذَا تُتْلَىٰ عَلَيْهِمْ
آيَاتُ الرَّحْمَٰنِ خَرُّوا سُجَّدًا وَبُكِيًّا

19:58. இவர்கள் ஆதமுடைய சந்ததியிலும், நூஹ்வுடன் (கப்பலில்) நாம் ஏற்றிக் கொண்டவர்களி(ன் சந்ததியி)லும், இப்ராஹீமுடையவும், இஸ்ராயீல் (யஃகூபின்) சந்ததியிலும், இன்னும் நாம் தேர்ந்தெடுத்து நேர்வழியில் நடத்தியவர்களிலுமுள்ள நபிமார்களாவார்கள் - இவர்கள் மீது அல்லாஹ் அருளைப் பொழிந்தான் அர்ரஹ்மானுடைய

1. விபரங்களுக்கு: الهدي النبوي في تربية الأولاد في ضوء الكتاب والسنة ، سعيد بن علي بن وهف القحطاني

வசனங்கள் அவர்களின் மீது ஓதப்பட்டால், அவர்கள் அழுதவர்களாகவும், ஸுஜூது செய்தவர்களாகவும் விழுவார்கள்.

فَخَلَفَ مِن بَعْدِهِمْ خَلْفٌ أَضَاعُوا الصَّلَاةَ وَاتَّبَعُوا الشَّهَوَاتِ ۖ فَسَوْفَ يَلْقَوْنَ غَيًّا 19:59

19:59. ஆனால், இவர்களுக்குப் பின் (வழி கெட்ட) சந்ததியினர் இவர்களுடைய இடத்திற்கு வந்தார்கள் அவர்கள் தொழுகையை வீணாக்கினார்கள் (இழிவான மன)இச்சைகளைப் பின்பற்றினார்கள் (மறுமையில்) அவர்கள் (நரகத்தின்) கேட்டைச் சந்திப்பார்கள்.

- ❖ இவ்வத்தியாயத்தில், மனிதனுக்குக் குழந்தைகளின் அவசியம், எடுத்துக்காட்டப்படுகிறது. அத்துடன் பின் வரும் விஷயமும் காட்டப்படுகிறது: 'அல்லாஹ்வுக்குப் பிள்ளைகள் என எவருமே இல்லை! அல்லாஹ்வுக்குப் பிள்ளைகள் உள்ளனர் என கற்பிப்பது, வானம் வெடித்துவிடும்; பூமி பிளந்து விடும்; மலை நொறுங்கித் தூள்-தூளாகும் அளவிற்கு, மிகப்பெரிய குற்றமாகும்'.
- ❖ கிறித்தவர்களுடைய அடிப்படைக் கொள்கையின் (Son of God) அஸ்திவாரம், தகர்த்தெறியப்படுகிறது. ஒரு பக்கம் கிறித்தவர்களுக்கு அழைப்பு; மற்றொரு பக்கம் மர்யம் (அலை) அவர்களின் உண்மைக்குச் சாட்சியளித்தல், மற்றும் யூதர்களின் அபாண்டம் தவறு எனப் பிரகடனம் செய்தல்.1
- ❖ நல்லோர்களுக்கு அல்லாஹ்வின் உதவி, பாதுகாப்பு, மற்றும் அருள் எவ்வாறு கிடைக்கிறது? என இவ்வத்தியாயம் எடுத்துரைக்கிறது.!
- ❖ அல்லாஹ்விற்கு முழுமையாக அடிபணிவதில், அல்லாஹ்வின் முழுமையான அன்பு இருக்கிறது. அடிபணிவதிலுள்ள குறைபாட்டால், அவனது அன்பைப் பெறுவதிலும் குறைவு ஏற்படும். (மஜ்மூ.ஃ. பதாவா – 1 : 213)

## சில தலைப்புகள்
### *Few Topics*

1. ஜகரிய்யா (அலை) அவர்களின் சரித்திரம் மற்றும் யஹ்யா (அலை) அவர்களின் பிறப்பைப் பற்றிய நற்செய்தி. (1-15)
2. மர்யம் (அலை), இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), இஸ்மாயீல் (அலை), இத்ரீஸ் (அலை) ஆகியோரின் சரித்திரக் குறிப்புகள். (16-57)

---

1. விபரங்களுக்கு: الجواب الصحيح لمن بدل دين المسيح ، أحمد بن عبد الحليم بن تيمية

3. சில நபிமார்களின் நிகழ்ச்சிகள் மற்றும் அல்லாஹ்வின் முன்னிலையில் அவர்கள் கண்ட பணிவு. (58)
4. கீழ்ப்படியாத சில சமுதாயங்கள் - குறிப்புகள்.(59)
5. மு.'.மின்கள் பற்றிய விபரங்களும், அவர்கள் அடையவிருக்கின்ற நற்கூலியும். (60-63)
6. தனித்தவனாக, வணக்கத்திற்குரியவனாக, இருக்கின்றவனின் கைவசத்தில்தான் அனைத்துக் காரியங்களும் உள்ளன. (64-65)
7. மறுமையை மறுப்போர் பெறுகின்ற கூலி மற்றும் அவர்களின் தன்மைகள். (66-75)
8. நேர்வழி பெற்ற நல்லோர் பெறுகின்ற கூலி. (76)
9. இணைவைப்பாளர்களின் பொய்யான குற்றச்சாட்டுக்களும், அவர்கள் கண்ட முடிவு பற்றிய விபரமும். (77-95)
10. ஈமான் கொண்டோர் பெறப்போகின்ற நற்கூலி, திருக்குர்ஆனின் முக்கியத்துவம், மற்றும் இதன் மூலம் காபிர்கள் சந்திக்கப்போகும் அழிவு - விபரம். (98-96)

## சில பாடங்கள்
*Few Lessions*

1. அல்லாஹ்விற்கு, நேர்ச்சை செய்வது மட்டுமே அனுமதிக்கப்பட்டது ஆகும்; பிறவற்றிற்கு செய்யப்படுகின்ற நேர்ச்சை ஷிர்க் ஆகம். 1
2. அல்லாஹ் எதையும் செய்திட வல்லமை கொண்டவன்; குழந்தை பாக்கியத்தையும் எந்த வயதிலும், எந்த முறையிலும் தர வல்லவன்.
3. வானமும், பூமியும் (வெடித்துப்) பிளக்கின்ற அளவிற்கு, 'ஷிர்க்' பயங்கரமான பாவமாகும்.
4. இயல்பாகவே மனிதர்கள் அனைவருமே குழந்தைகளை விரும்புகின்றனர். ஏனெனில் அவர்கள் கண்களின் குளிர்ச்சி; மனதின் மகிழ்ச்சி; இதயத்தின் அமைதி; உலக வாழ்வின் அலங்காரமும் ஆவர்.
5. குழந்தைகள், அல்லாஹ் அருளுகின்ற அன்பளிப்பு; அரிய பரிசு.! அவர்களை நேசிப்பது மனித இயல்பு; அனஸ் (ரலி) அவர்கள், அதிகமான குழந்தைகளைப் பெற்றிட, இரஸூல் (ஸல்) அவர்கள், பின்வருமாறு துஆ செய்துள்ளனர்: اللّٰهُمَّ أَكْثِرْ مَالَـــــهُ وَوَلَدَهُ، وَبَارِكْ لَــــهُ فِيْمَا أَعْطَيْتَــــهُ 'யா அல்லாஹ் அவருக்கு செல்வத்தையும், குழந்தைகளையும் அதிகப்படுத்துவாயாக! அவருக்கு

1. விபரங்களுக்கு: كتاب التوحيد هو حق الله على العبيد : محمد بن عبد الوهاب

வழங்கியவைகளில் அபிவிருத்தியையும் நல்குவாயாக!!" (ஸஹீஹுல் புகாரீ: 6344)

6. ஜகரிய்யா (அலை) அவர்களின் நிகழ்விலிருந்து பின்வரும் பாடம் கிடைக்கிறது: ''அல்லாஹ்வை அதிகம் நினைவுகூர்வதால், குறிப்பிட்ட சிறப்புக்களை அடையலாம்; 'திக்ரு' செய்வது அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கும், அவனை நெருங்குவதற்கும், அனைத்திலும் சிறந்த வழிமுறையாகும்".
7. இறையழைப்புப் பணியை எங்கும், எப்பொழுதும், தொடர்ச்சியாகச் செய்துவர வேண்டும்; அதை நிறுத்தலாகாது..!
8. கல்வியைத் தேட, அயராத உழைப்பும், மனஉறுதியும் அவசியமாகும்; அத்துடன் கற்றதைச் செயல்படுத்தவும், கற்றதை நோக்கி அழைப்பு விடுக்கவும் அழுத்தம் தரப்படுகிறது.
9. பெற்றோர், தம்முடைய பிள்ளைகளுக்கு (சிறுவயது முதல்) நல்லொழுக்கப் பயிற்சியளித்து, தகுதிமிக்கவர்களாக மாற்றுவதுடன், அவர்களுக்கு நபிமார்களின் வாழ்க்கையைக் குறித்து, போதனை செய்யுமாறும் வழிகாட்டப்பட்டுள்ளனர்.!
10. கருணை - இயல்பான தன்மைகளில் ஒன்று! அல்லாஹ் தான் நாடியோருக்கு இத் தன்மையை அருள்கிறான்.. இறையழைப்பாளர்கள் இது போன்ற தன்மை கொண்டவர்களாக மாறுக!
11. இறையச்சத்தின் முக்கியத்துவம் எதுவெனில், அது வெற்றியின் திறவு கோல்; வெற்றிக்கான வழியும் அதுவே..!
12. ஒரு இறையழைப்பாளன், வீட்டில் முன்மாதிரியாக இருப்பான்; பெற்றோரிடம் கனிவுடன் இருப்பான்; நல்லுறவைப் பேணுவான்.. இவ்வாறாக அவர்களின் திருப்தியையும், 'துஆ'க்களையும் பெற்றிடுவான்..!
13. மர்யம் (அலை) அவர்களின் நிகழ்வுகளில் இருந்து, பின்வரும் பாடம் கிடைக்கிறது: 'ஒரு வணக்கசாலி, ஒரு இறையழைப்பாளர், ஒரு நிர்வாகி மற்றும் ஒரு சீர்திருத்தவாதி, ஆகியோர், தனிமையிலும் இறைவணக்கம் புரிந்தவண்ணமிருந்திடுக! இதன் மூலம், மனம் தூய்மையடையும்; ஆத்மா உயர்வு பெறும்; உள்ளம் பரிசுத்தமாகும்; அல்லாஹ்வின் நெருக்கமும் கிட்டும்..!!
14. ஒரு மு.்.மினுக்குக், குழப்பங்களில் வீழுகின்ற அச்சம் ஏற்பட்டு, அவைகளைத் தடுக்கமுடியாத சூழல் தோன்றுமானால் .. மர்யம் (அலை) அவர்கள், மரணத்தை எதிர்பார்த்ததைப் போல், இவரும் மரணத்தை எதிர்பார்க்கலாம்.!
15. பேரீத்தம் பழம் பெண்களுக்கு, பிரசவ ருது (நிபாஸ்) சமயத்தில் பயனளிக்கின்றது. அதில் இன்னும் பல மருத்துவப் பயன்கள் உள்ளன; கர்ப்ப காலத்தின் கடைசி நாட்களில், இதனைப் பயன்படுத்துவதால், கருவறை வலுவடைகிறது.. இன்னும்

குளுகோஸை அதிகப்படுத்துகிறது.!

16. தனது சமூகத்தினர், தன் மீது அபாண்டமாகப் பழிசுமத்தி, வரம்பு மீறியபோது, தனது கற்பையும், பரிசுத்தத்தையும் பேணுவதற்காக, மர்யம் (அலை) அவர்கள், மௌனத்தைக் கடைபிடித்தார்கள்.. இதிலிருந்து, முட்டாள்களின் பேச்சுக்களைப் புறக்கணிப்பதன் அவசியத்தை அறிந்துகொள்ளலாம்.

17. இப்றாஹீம் (அலை) அவர்களிடத்தில் இயற்கையாகவே, உண்மையைப் போற்றுகின்ற தன்மை மிக அதிகமிருந்தது. அதனால், நபியென அறிமுகப்படுத்தப் படுவதற்கு முன்பே, அவர்கள் உண்மையாளர், என அறியப்பட்டார்கள். தமது நபித்துவத்திற்கு முன்பே, தம் உண்மைத் தன்மையால் அறியப்பட்ட, இதர நபிமார்களைப் போல் --- நம் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள், ‘அஸ்ஸாதிக்’ என்ற பட்டப்பெயரால் அழைக்கப்பட்டது போல், (இப்றாஹீம் (அலை) அவர்களும், அஸ்ஸாதிக் (உண்மையாளர்) என அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.)

18. வெற்றிகரமான உரையாடலுக்கு, அழகிய ஆரம்பமும், இனிய முடிவும் தேவை!. இப்றாஹீம் (அலை) தன் தந்தையுடன் நிகழ்த்திய உரையாடலில் இவ்விரண்டும் அமைந்துள்ளன.!

19. 19:42 إِذْ قَالَ لِأَبِيهِ يَا أَبَتِ لِمَ تَعْبُدُ مَا لَا يَسْمَعُ وَلَا يُبْصِرُ وَلَا يُغْنِي عَنكَ شَيْئًا

19:42. “என் அருமைத் தந்தையே! (யாதொன்றையும்) கேட்க இயலாத, பார்க்க இயலாத உங்களுக்கு எந்தத் தேவையையும் பூர்த்தி செய்ய இயலாததுமான ஒன்றை ஏன் நீங்கள் வணங்குகிறீர்கள்?” என்று அவர் தம் தந்தையிடம் கூறியதை நினைவுபடுத்தும்.

☞ நபி இப்றாஹீம் (அலை), தந்தையிடம், ஆரம்பமாக, மறுக்கும் விதமாக வினா எழுப்பிப் புரியவைப்பதற்கு முயற்சித்தனர்.!

19:43 يَا أَبَتِ إِنِّي قَدْ جَاءَنِي مِنَ الْعِلْمِ مَا لَمْ يَأْتِكَ فَاتَّبِعْنِي أَهْدِكَ صِرَاطًا سَوِيًّا

19:43. “என் அருமைத் தந்தையே! மெய்யாகவே உங்களிடம் வந்திராத கல்வி ஞானம் நிச்சயமாக எனக்கு வந்திருக்கிறது ஆகவே, நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள் நான் உங்களைச் செவ்வையான நேர்வழியில் நடத்துகிறேன்.

☞ (தந்தையின்) கவனத்தை ஈர்க்கின்ற வகையில், இவ்விதம் கூறினர்..!

19:44 يَا أَبَتِ لَا تَعْبُدِ الشَّيْطَانَ ۖ إِنَّ الشَّيْطَانَ كَانَ لِلرَّحْمَٰنِ عَصِيًّا

19:44. “என் அருமைத் தந்தையே! நீங்கள் ஷைத்தானை வணங்காதீர்கள் நிச்சயமாக ஷைத்தான், அர்ரஹ்மானுக்கு (அருள் மிக்க நாயனுக்கு) மாறு செய்பவன்.

☞ பிறகு (தந்தையின் தவறைத்) தெளிவாக மறுத்துரைத்தனர்…!

يَا أَبَتِ إِنِّي أَخَافُ أَن يَمَسَّكَ عَذَابٌ مِّنَ الرَّحْمَٰنِ فَتَكُونَ لِلشَّيْطَانِ وَلِيًّا 19:45

19:45. "என் அருமைத் தந்தையே! நிச்சயமாக அர்ரஹ்மானிடமிருந்துள்ள வேதனை வந்து உங்களைத் தொட்டு, நீங்கள் ஷைத்தானின் கூட்டாளியாகி விடுவதைப் பற்றி நான் அஞ்சுகிறேன்" (என்றார்).

☞ (எதிர்காலத்தில் நிகழப் போவதை) எச்சரித்துப் புரியவைத்தனர்.!

20. நபி இப்றாஹீம் (அலை) அவர்கள், தந்தையுடன் நிகழ்ந்த உரையாடலில், பல்வேறு வகைகளைக் கையாண்டனர்,, முதலில் தன் தந்தையுடைய கொள்கையின் சீர்கேட்டைச் சுட்டிக்காட்டினர்.! பிறகு சீரிய கொள்கையைத் தெளிவுபடுத்தினர்..! அடுத்து சூழ்ச்சி செய்யும் ஷைத்தானை எச்சரிக்கின்றனர்...! அடுத்ததாக அர்ரஹ்மானுடைய கோபத்தையும், அவன் தருகின்ற வேதனையையும் எச்சரிக்கின்றனர்....!

21. இவ்வுரையாடலில் 'அர்ரஹ்மான்' (கருணை மிக்கவன்) திரும்பத் திரும்ப இடம்பெறுகிறது.. காரணம்,., இதன் மூலம் இப்றாஹீம் (அலை) அவர்களின் தந்தை, பின்வருமாறு சிந்திப்பதற்காக: 'தனக்கு அவகாசமளித்துள்ள அந்த இறைவன், இரக்கமுள்ளவன்.. அவன் விரும்பியிருந்தால் தனது தவறுகளுக்காக உடனடியாகத் தண்டித்திருக்கலாம்.. இருப்பினும் அல்லாஹ் தனக்கு உணவளிக்கிறான்; பாதுகாக்கிறான்.. யார் மீது தீர்ப்பு இறுதியாகிவிட்டதோ, அவரையே அவன் தண்டிக்கிறான்..!'

22. வழிபாடு அல்லாஹ்வை நெருங்குவதற்கான வழிமுறை ஆகும். அதன் மூலம் அல்லாஹ்வின் அருள், கிருபை, மற்றும் நிரந்தர வெற்றி கிடைக்கும்.!

23. தொழுகையுடன் ஜகாத்தையும் சேர்த்துச் சொல்லப்படுவது, பின்வரும் விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறது: 'தொழுகை அல்லாஹ்வின் உரிமை: ஜகாத் அவனது அடியார்களின் உரிமை! இரண்டு வகை உரிமைகளையும், நிறைவேற்றினால்தான், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெறமுடியும்.

24. உள்ளத்தில் இறையச்சம், உறுப்புகளின் செயல்பாட்டில் உள்ளச்சம், ஆகியன அல்லாஹ்விற்கு அடிபணிந்து நடப்பதன் அடையாளங்கள்; படைத்தவனை மதிக்கின்ற அளவிற்குத்தான் ஒருவன், அல்லாஹ்வை அஞ்சிநடப்பான்!

25. தொழுகையை வீணாக்கியதைப் பற்றிப் பேசியவுடனேயே, மனோஇச்சையில் மூழ்குவதைப் பற்றி பேசப்பட்டிருக்கிறது. காரணம், தொழுகை.., நல்லடியார்களுக்கான அளவுகோலாகவும், வெற்றிக்கான வழியாகவும் திகழ்கிறது.. ஆத்மாவின் வளமாகவும், மனத்தூய்மைக்கான சான்றாகவும் திகழ்கிறது..!

26. தன் அடியார்களுக்கு, தவ்பாவின் வாசலை, அல்லாஹ் திறந்து வைத்திருப்பது, அவனது அருளாகும்..!
27. சுவனத்தில் வீணான விஷயங்களைச் செவியுறமாட்டார்கள், என்பது அதன் உன்னதமான அருட்கொடைகளுக்கான ஓர் ஆதாரமாகும். சுவனம், கவலைகள் அனைத்தில் இருந்தும் விடுதலையளிக்கும் வீடு ஆகும்.!
28. சுவனத்தின் வாரிசுதாரர்களாக, ஆக ஈமானும் நல்லமல்களும் அவசியமாகும்.
29. நபிமார்களின் சமுதாயத்தினர், தொழுகையை வீணாக்கி, மனோஇச்சைகளில் உழன்றபோது, அவர்களின் குடும்பப் பாரம்பர்யம், அவர்களுக்கு எந்தப் பயனையும் தரவில்லை!
30. வானவர்கள், அல்லாஹ்வின் படைப்பே! அவன் ஏவுவதைச் செய்வர்; தடுத்ததைத் தவிர்ப்பர்!!
31. கியாம நாள் வருவது சத்தியமே! அறிவாளி அதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபடுக!!
32. 'அஸ்ஸிராத்' - என்பது நரகத்தின் முதுகில் இருக்கின்ற ஒரு பாலம் ஆகும். மு.்.மின்களும், காபிர்களும் அதனைக் கடந்து செல்வர்.. நல்லோரை, அல்லாஹ் காப்பாற்றிக் கரைசேர்ப்பான்! தீயவரை, நரகத் தீயில் விழவைப்பான்.
33. அதிக செல்வத்தையும், குழந்தைகளையும், பெற்றிடுவதாலோ அல்லது மதிப்பு மிக்க பொருட்களையும், சபையோரின் மரியாதையையும் அடைந்திடுவதாலோ, வெற்றி கிடைத்திடுவதில்லை.! இவையனைத்தும், இவ்வுலகத்தின் பொருட்களே!! உண்மையான வெற்றி, இறையச்சமும், பரிசுத்தமும் ஆகும்.
34. அல்லாஹ்வின் வசனங்கள் குறித்த, காபிர்களின் அணுகுமுறை, வினோதமானதாகும்; அல்லாஹ்வின் வசனங்களில், நம்பிக்கை கொண்டு, அவனுக்குச் சிரம் பணியவேண்டிய அவர்கள், அநியாயத்தில் வரம்புமீறுகிறார்கள்; அகங்கார , ஆணவத்துடன் திரிகிறார்கள்..!
35. யார் அநியாயத்தில் உழல்கிறார்களோ, வழிகேட்டில் மூழ்கித் திளைக்கிறார்களோ, அவர்களை, அல்லாஹ் அதில் அப்படியே விட்டுவிடுகிறான்; அவகாசம் தருகிறான்! இதற்கு மாற்றமாக, நேர்வழி பெற்றோருக்கு, இன்னும் நேர்வழியை அதிகப்படுத்தி, அவர்களைச் சீரிய பாதையில் செலுத்துகிறான்.
36. இணைவைப்பாளர்கள், தமது பிடிவாதத்தாலும், அலட்சியத்தாலும்.., எண்ண ஓட்டத்திலும், இணைவைப்பிலும், ஷைத்தானைப் பிரதிபலிக்கிறார்கள்.!
37. இறையச்சமுடையவர்கள், அணி அணியாக அல்லாஹ்வின் முன்னே வருவார்கள்; அவர்களுக்காக நிழல் இருக்கும்; சுபச்

செய்திகள் தரப்படும்; பரிசுகள் வழங்கப்படும்; நேர்வழியையும் நற்கூலியையும் பெற்றிடுவர்; சகோதரர்களாக வீற்றிருப்பர்!

38. கியாமத் நாளின் பயங்கரங்களில் ஒன்று: குற்றவாளிகள், விலங்குச் சங்கிலிகளால் கட்டப்பட்டுக் கொண்டுவரப்படுதல்.., முதுகு வளைந்து விடும்; பாதம் கனத்துவிடும். அவர்கள் நரகத்தை நோக்கி எறியப்படுவர்..!

39. சிபாரிசுக்கான பொறுப்பு யாவுமே, (அந்நாளில்) அல்லாஹ்விடமிருக்கும்; தான் விரும்புவோருக்கு அப் பொறுப்பைத் தருவான்.

40. அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா, தனக்குக் குழந்தைகள் கற்பிக்கப்படுவதை, மறுக்கிறான். ஏனென்றால், அவன் தேவையற்றவன்; நித்திய ஜீவன்... 'தமக்கு ஆதரவு தேவைப்படும் - தமது பெயர் சொல்லப்படவேண்டும் - தமக்கு வாரிசு வரவேண்டும்' என்பதற்காகவே, மக்கள் தமக்குப் பிள்ளைகளை விரும்புகின்றனர்.

41. சொர்க்கத்தில் அல்லாஹ், தன் அடியார்களுக்கு மத்தியில் பாசத்தை, ஏற்படுத்திடுவான்.!

42. நற்செய்தி தருவதற்காகவும், நரகம் குறித்து எச்சரிப்பதற்காகவும், திருக்குர்ஆன் அருளப்பட்டது.

43. கவனத்தை ஈர்க்கின்ற பின்வரும் வினாக்களுடன், இவ்வத்தியாயம் நிறைவுபெறுகிறது: 'கண்கள் இருந்தனவே! காதுகளும் இருந்தனவே!! இன்று அவர்களின் அடையாளங்கள் அழிந்துபோயினவே!!! அவர்களல் செவியேற்க முடியுமா!? உணர முடியுமா!? குரலைச் செவியுற்று, அதற்கு பதிலிறுக்கத்தான் இயலுமா!?

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள்

❖ 'முரண்பட்டவர்கள், பிடிவாதத்தையே வெளிப்படுத்தினர்; சீர்திருத்தவாதிகளைப் பகைவர்களாகப், பிரகடனம் செய்தனர்.! அப்படி இருந்தும், இறையழைப்பாளர்கள், தங்களின் கொள்கையில் உறுதி மற்றும் நிலைகுலையாத தன்மையை வெளிப்படுத்தினர்' என்கிறது, அல்கஹ்ப் ஸூரா, அவ்வாறே, ஸூரா மர்யம், முரண்பட்டவர்களிடமிருந்து, கஷ்டங்களும் சோதனைகளும் வந்தபோதும், நபிமார்கள் காட்டிய உறுதிகுலையாத தன்மையைப், பேசுகிறது.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

وَاذْكُرْ فِي الْكِتَابِ إِبْرَاهِيمَ ۚ إِنَّهُ كَانَ صِدِّيقًا نَّبِيًّا 19:41

19:41. (நபியே!) இவ்வேதத்தில் இப்ராஹீமைப்பற்றியும் நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் மிக்க உண்மையாளராகவும் - நபியாகவும் - இருந்தார்.

إِذْ قَالَ لِأَبِيهِ يَا أَبَتِ لِمَ تَعْبُدُ مَا لَا يَسْمَعُ وَلَا يُبْصِرُ وَلَا يُغْنِي عَنكَ شَيْئًا 19:42

19:42. "என் அருமைத் தந்தையே! (யாதொன்றையும்) கேட்க இயலாத, பார்க்க இயலாத உங்களுக்கு எந்தத் தேவையையும் பூர்த்தி செய்ய இயலாததுமான ஒன்றை ஏன் நீங்கள் வணங்குகிறீர்கள்?" என்று அவர் தம் தந்தையிடம் கூறியதை நினைவுபடுத்தும்.

يَا أَبَتِ إِنِّي قَدْ جَاءَنِي مِنَ الْعِلْمِ مَا لَمْ يَأْتِكَ فَاتَّبِعْنِي أَهْدِكَ صِرَاطًا سَوِيًّا 19:43

19:43. "என் அருமைத் தந்தையே! மெய்யாகவே உங்களிடம் வந்திராத கல்வி ஞானம் நிச்சயமாக எனக்கு வந்திருக்கிறது ஆகவே, நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள் நான் உங்களைச் செவ்வையான நேர்வழியில் நடத்துகிறேன்.

يَا أَبَتِ لَا تَعْبُدِ الشَّيْطَانَ ۖ إِنَّ الشَّيْطَانَ كَانَ لِلرَّحْمَٰنِ عَصِيًّا 19:44

19:44. "என் அருமைத் தந்தையே! நீங்கள் ஷைத்தானை வணங்காதீர்கள் நிச்சயமாக ஷைத்தான், அர்ரஹ்மானுக்கு (அருள் மிக்க நாயனுக்கு) மாறு செய்பவன்.

يَا أَبَتِ إِنِّي أَخَافُ أَن يَمَسَّكَ عَذَابٌ مِّنَ الرَّحْمَٰنِ فَتَكُونَ لِلشَّيْطَانِ وَلِيًّا 19:45

19:45. "என் அருமைத் தந்தையே! நிச்சயமாக அர்ரஹ்மானிடமிருந்துள்ள வேதனை வந்து உங்களைத் தொட்டு, நீங்கள் ஷைத்தானின் கூட்டாளியாகி விடுவதைப் பற்றி நான் அஞ்சுகிறேன் (என்றார்).

## திருக்குர்ஆன்

وَقَالُوا اتَّخَذَ الرَّحْمَٰنُ وَلَدًا 19:88

19:88இன்னும், "அர்ரஹ்மான் (தனக்கென) ஒரு குமாரனை எடுத்துக் கொண்டுள்ளான்" என்று அவர்கள் கூறுகிறார்கள்.

لَّقَدْ جِئْتُمْ شَيْئًا إِدًّا 19:89

19:89 நிச்சயமாக நீங்கள் அபாண்டமான (ஒரு கூற்றைக்) கொண்டு வந்திருக்கிறீர்கள்.

تَكَادُ السَّمَاوَاتُ يَتَفَطَّرْنَ مِنْهُ وَتَنشَقُّ الْأَرْضُ وَتَخِرُّ الْجِبَالُ هَدًّا 19:90

19:90 இவர்களின் இந்தக் கூற்றினால் வானங்கள் வெடித்து பூமி பிளந்து மலைகள் சிதறுண்டு விடும் போதிலும்.

أَن دَعَوْا لِلرَّحْمَٰنِ وَلَدًا 19:91

19:91 அவர்கள் அர்ரஹ்மானுக்கு ஒரு குமாரன் உண்டென்று தாவாச்செய்வதினால்-

وَمَا يَنبَغِي لِلرَّحْمَٰنِ أَن يَتَّخِذَ وَلَدًا 19:92

19:92 ஒரு குமாரனை எடுத்துக் கொள்வது அல்லாஹ்வுக்குத் தேவையில்லாதது.

إِن كُلُّ مَن فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ إِلَّا آتِي الرَّحْمَٰنِ عَبْدًا 19:93

19:93 ஏனென்றால் வானங்களிலும், பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும் அர்ரஹ்மானிடம் அடிமையாய் வருபவரேயன்றி வேறில்லை.

لَّقَدْ أَحْصَاهُمْ وَعَدَّهُمْ عَدًّا 19:94

19:94 நிச்சயமாக அவற்றையெல்லாம் அவன் சூழ்ந்தறிகிறான் இன்னும் அவற்றைத் துல்லியமாகக் கணக்கிட்டு வைத்திருக்கிறான்.

وَكُلُّهُمْ آتِيهِ يَوْمَ الْقِيَامَةِ فَرْدًا 19:95

19:95 கியாம நாளில் அவர்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவனிடம் வருவர்.

## அல்ஹதீஸ்

عن ابن عباس سمع عمر رضي الله عنه يقول : على المنبر سمعت النبي
صلى الله عليه وسلم يقول: لا تطروني كما اطرت النصاري ابن مريم فانما
أنا عبده ، فقولوا عبد الله ورسوله، (صحيح البخاري: ٣٤٤٥)

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், மிம்பரில் உமர் (ரலி) அவர்கள் சொல்லக் கேட்டதாவது:‘‘ நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைச் செவியுற்றேன்: ‘மர்யம் உடைய மகன் ஈஸாவைக் கிறித்தவர்கள், அளவு கடந்துப் புகழ்ந்ததைப் போல், என்னை எல்லை மீறிப் புகழ்ந்து பேசாதீர்; நான் அல்லாஹ்வின் அடிமையே! எனவே (என்னை) அல்லாஹ்வின் அடிமை மற்றும் அவனுடைய தூதர் எனச் சொல்லுங்கள்’.” (அல்புகாரீ:3445)